

பிரார்த்தனை

என்ன ? ஏன் ? எப்படி ?

மகாத்மா காந்தி

காந்தி இலக்கிய மன்றம்

காந்தி இலக்கிய மன்றம்

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை-13

பிரார்த்தனை

என்ன ஏன் எப்படி?

மகாத்மா காந்தி

தமிழாக்கம்:
ஜெயமணி சுப்ரமணியம்

தமிழ்நாடு காந்தி நினைவுநிதி
மதுரை-13

காந்தி இலக்கிய மன்ற வரிசை நூல் 4
முதற் பதிப்பு: ஆகஸ்ட் 1970

நவஜீவன் டிரஸ்டின்
அனுமதி பெற்றது.

விலை 50 காசு

ராம்ஜே பிரிண்டர்ஸ், மதுரை-1.

பதிப்புரை

காந்தியடிகள் வாழ்க்கையிலிருந்து அரசியலை நீக்கிவிட்டால் இந்தியாவில் தோன்றும் மகாபுருஷர்களின் வரிசையில் மட்டும் வைத்தெண்ணப்பட்டிருப்பார். ஆனால் அவரது வாழ்வில் ஆன்மீகத்தை நீக்கி விட்டாலோ அவரே இல்லை எனலாம். 'வாழ்க்கையின் எந்தத் துறையும் தனித்தியங்க முடியாது வாழ்க்கை என்பது பகுக்க முடியாத ஒன்று' எனக் காந்தியடிகள் கூறிவந்தார். எனவே அரசியல் தொண்டையும் ஆன்மீக சாதனமா ஆக்கி இந்தியாவிற்கு மட்டுமின்றி உலகுக்கே தனிப்பெரும் வழிவகுத்துக் கொடுத்தார். அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் பணத்தையும் பொருளையும் பெரிதெனப் போற்றும் இந்நாளில் தன்னலமற்ற தொண்டுதான் கடவுள் வழிபாடாகும் என்று அண்ணல் வற்புறுத்தினார். கடவுள் வழிபாடு பற்றிக் காந்தியடிகளின் சில கருத்துக்களைத் தொகுத்து இச்சிறு நூலாக வெளியிட்டிருக்கிறோம்; அனைவரும் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

ம. மு. விசுவநாதன்
செயலாளர்
தமிழ் நாடு காந்தி நினைவு நிதி

மதுரை—13,
22-8-1970.

பொருளடக்கம்

15-4

1 பிரார்த்தனை என்றால் என்ன?

ஒரு வைத்திய பட்டதாரி கீழ்வருமாறு கேள்விகள் கேட்டுள்ளார்;

"பிரார்த்தனையில் சிறந்த முறை எது? அதில் எவ்வளவு நேரத்தைச் செலவிட வேண்டும்? நீதியுடன் நடந்துகொள்ளுவதே சிறந்த பிரார்த்தனை முறை என்பது எனது அபிப்பிராயம் எல்லோருக்கும் நீதி வழங்கவேண்டும் என்பதில் அந்தரங்க சுத்தியுடன் இருப்பவர்கள், பிரார்த்தனை செய்யவேண்டிய அவசியமே இல்லை. சிலர் வெகுநேரம் சந்தியா-வந்தனம் செய்கிறார்கள். ஆனால், அவர்களில் 95 சதவிகிதத்தினருக்கு தாங்கள் கூறும் மந்திரங்-களுக்கு அர்த்தம் தெரியாது. அவரும் தம்முடைய தாய் மொழியிலேயே பிரார்த்தனை செய்யவேண்டும் என்பது என் அபிப்பிராயம். அவ்விதம் செய்தால் மாத்திரமே ஆன்மாவுக்குச் சிறந்த முறையில் பலன் ஏற்படமுடியும். மனப்பூர்வமாக ஒரு நிமிஷ நேரம் பிரார்த்தனை செய்தாலும் போதுமானது என்றே நான் கூறுவேன். பாவம் செய்வதில்லை என்று கடவுளிடம் உறுதி கூறுவதற்கு அந்த நேரம் போதுமானது."

கடவுளிடமிருந்து பயபக்தியுடன் ஏதாவது கேட்பதே 'பிரார்த்தனை' என்பதன் பொருளாகும். எனினும், பக்தியுடன் கூடிய ஏதாவது நடவடிக்கையைக் குறிப்பதற்கு அந்தச்சொல் உபயோகப்படுகிறது. கடிதம் எழுதியிருப்பவரின் மனத்தில் உள்ளதைக் குறிப்பிட வழிபாடு என்ற சொல்லை உபயோகிப்பதே சிறந்தது. இது சம்பந்தமான விளக்கம் ஒருபுறம் இருக்

கட்டும். தங்களைப் படைத்த கடவுளைத் தொழுவதற்காகக் குறிப்பிட்ட நேரங்களில் கோடிக்கணக்கான இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், யூதர்களும், மற்றவர்களும் என்ன செய்கிறார்கள்? கடவுளுடன் ஒன்றிய நிலையை அடைய, கடவுளின் அருளைப்பெற, உள்ளத்தின் வேட்கையை வெளியிடு வதே பிரார்த்தனை என்று எனக்குத்தோன்றுகிறது. இந்த இடத்தில் மனநிலைதான் முக்கியமேயன்றி, வாயால் கூறும் அல்லது முணுமுணுக்கும் வார்த்தைகள் முக்கியமல்ல. வார்த் தைகளின் சேர்க்கையானது, பண்டைய காலத்திலிருந்து வாழை யடி வாழையாக வந்துகொண்டிருக்கிறது. அதனால் உண்டாகும் உணர்ச்சி, அதை ஒருவரது தாய்மொழியில் பெயர்த்துக் கூறும் போது மறைந்துவிடும். உதாரணமாக, காயத்ரி மந்திரத்தை குஜராத்தியில் மொழி பெயர்த்தால், வடமொழியில் உள்ள அந்த மந்திரத்தின் வேகம் குன்றாமல் அப்படியே இருக்க முடியாது. ராமா என்ற சொல்லைக்கூறினால், கோடிக்கணக்கான இந்துக் களின் மனம் உருகுகின்றது. ஆனால், அதே அர்த்தத்தில் கடவுள் என்ற வார்த்தையை உபயோகித்தால் அதன் பொருளை அவர்கள் புரிந்துகொள்ளுவார்கள் என்றாலும், அது அவர்களு டைய உள்ளத்தைத் தொடாது. வார்த்தைகள் நீண்டகால உபயோகத்தினாலும், அவற்றிற்குள்ள தெய்விகத் தொடர்பினா லும் ஒருவித சக்தி பெற்று விளங்குகின்றன. எனவே, பிரபல மான மந்திரங்களோ அல்லது சுலோகங்களோ வடமொழியில் தான் இருக்கவேண்டும். எனினும், அவற்றின் பொருளை எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

பக்தி சம்பந்தமான காரியங்களைக் கைக்கொள்ளவேண்டிய நேரம் என்ன என்பதுபற்றி நிர்ணயமான விதி எதுவும் வகுக்க முடியாது. அது, அவரவர் மனப்போக்கைப் பொறுத்ததாகும்.

ஒருவருடைய தினசரி வாழ்க்கையில் பொன்போன்ற தருணங்கள் ஏற்படுகின்றன. நம்மை நிதான புத்தி உள்ளவர்களாகவும், பணிவுள்ளவர்களாகவும் செய்து 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது'; 'நாம் எல்லோரும் குயவன் கை மண்ணைபோல் இருப்பவர்கள்' என்பதை உணரும்படியும் செய்வதே பிரார்த்தனைகளின் நோக்கமாகும். ஒருவர் தமது பழைய செயலைப் பரிசிலனை செய்வதும், தமது பலவீனத்தை ஒப்புக்கொள்ளுவதும், கடவுளின் மன்னிப்பையும், இனி எதிர்காலத்தில் சிறந்தமுறையில் நடந்துகொள்வதற்கான பலத்தையும் கோருவதுமான தருணங்கள் வாழ்க்கையில் ஏற்படுவது உண்டு. அவ்விதம் பிரார்த்தனை செய்வதற்கு ஒரே நிமிஷம்கூடச் சிலருக்குப் போதுமானது; சிலருக்கு இருபத்து நான்கு மணிநேரம் கூடச் சிறிதும் போதாது. தங்களிடத்தில் கடவுள் இருப்பதை உணர்ந்தவர்களுக்கு, உழைப்பதே பிரார்த்தனை செய்வதுதான். அவர்களுடைய வாழ்க்கை, இடைவிடாத பிரார்த்தனை அல்லது இடைவிடாத கடவுள் வழிபாடுதான். பாவச்செயல்களிலும், மனம் போனபடி காரியங்களைச் செய்வதிலும் ஈடுபட்டுத் தனக்காக மாத்திரமே வாழ்வோருக்கு எவ்வளவு நேரம் இருந்தாலும் போதாது. பொறுமையும், நம்பிக்கையும், தூய்மையும் இருக்க வேண்டும் என்ற உறுதியும் அவர்களுக்கு இருக்குமாயின் தூய்மைப்படுத்தும் கடவுள் தங்கள் உள்ளே இருப்பதாக நிச்சயமாக உணரும் வரையில் பிரார்த்தனை செய்து வருவார்கள்.

எனினும், சாதாரண மனிதர்களான நாம் அந்த இரண்டு தீவிரமான நிலைகளையும் விட்டுவிட்டு, நடுவிலுள்ள வழியில் செல்லவேண்டும். நமது செய்கைகளையெல்லாம் கடவுளுக்கே அர்ப்பணமாகச் செய்துவருகிறோம் என்ற மகோன்னத நிலையில் நாம் இருப்பதாகக்கூறிக் கொள்ளமுடியாது; தனக்காக என்றே வாழும் இழிநிலைக்கு நாம் வந்துவிடவும் இல்லை. அதனாலேயே,

எல்லா மதங்களும் பொதுவாக கடவுள் வழிபாட்டிற்கு என்றே காலங்களை ஒதுக்கி வைத்திருக்கின்றன. துரதிருஷ்டவசமாக, இவையெல்லாம் இந்த நாட்களில், போலிவேஷமாக இராத இடங்களில், சம்பிரதாயமான, யந்திரம் போன்ற நிலைக்கு வந்திருக்கின்றன. எனவே, இன்று அவசியமாகத் தேவைப் படுவது என்னவெனில், இந்த வழிபாடுகளுக்கு உகந்த ஒழுங் கான மனநிலை ஏற்படவேண்டும் என்பதுதான்.

கடவுளிடம் குறிப்பிட்ட எதையோ கோரி சொந்த முறை யில் பிரார்த்திப்பது நிச்சயமாக ஒருவருடைய தாய் மொழியில் தான் இருக்கவேண்டும். உலகில் வாழும் எல்லாவற்றினிடமும் நீதியுடன் நடந்துகொள்ளும்படி நம்மைச் செய்யவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திப்பதைக் காட்டிலும் மேன்மை யானது வேறு எதுவும் இருக்கமுடியாது.

"எங் இந்தியா" 10–6–1926.

பிரார்த்தனை என்பது, கடவுளை ஏதாவது கேட்பதல்ல. அது ஆன்மாவின் ஏக்கமே. அது ஒருவருடைய பலவீனத்தை நாள்தோறும் ஒப்புக்கொள்வதாகும். நம்மிடையே மிகமிகப் பெரியவராக இருப்பவருக்குக்கூட, மரணம், நோய், வயோதிகம், விபத்துக்கள் முதலியவை, அவற்றின் முன்னிலையில் அவர் எம்மாத்திரம் என்பதை இடைவிடாது ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றன. மரணத்தின் மத்தியிலேயே நாம் வாழ்ந்து வருகிறோம். கண் சிமிட்டும் நேரத்தில் நமது சொந்தத் திட்டங்கள் எல்லாம் தவிடுபொடியாகி விடலாம்; அல்லது திடீர் என்று நாமே இறக்கும்படி நேர்ந்து விடலாம். எனவே, "கடவுளுக்காகவும் அவரது திட்டங்களுக்காகவுமே நாம் வாழ் கிறோம்" என்று நாம் உண்மையாகக் கூறமுடியுமாயின், பாறை

போல் பலத்துடன் இருப்பதை நாம் உணரலாம். அதன்பின், எல்லாம் பட்டப்பகலைப் போல் தெளிவாகப் புலனுகும். பின்னர் எதுவுமே அழிவதில்லை என்பதை நாம் உணருவோம். பிறகு, மரணமும் அழிவும் ஒரு மாறுதலே என்பதும் தெரியும். ஓர் ஓவிய நிபுணர், மற்ருெரு சிறந்த சித்திரத்தைச் சிருஷ்டிப்பதற் காகத் தமது சித்திரத்தை அழிக்கிருர். கடிகாரத்தைப் பழுது பார்ப்பவர், அதில் புதிய வில் விசையை வைப்பதற்காகக் கெட்டுப்போன பழைய வில் விசையை அப்பால் எறிந்து விடுகிருர்.

''எங் இந்தியா'' 23-9-1926.

2 பிரார்த்தனையின் அர்த்தமும் அவசியமும்.

சமயங்களின் உயிர்நாடி பிரார்த்தனைதான் என்பது எனது நம்பிக்கையாகும். எனவே, மனித வாழ்க்கையின் உயிர்நாடி பிரார்த்தனையாகவே இருக்கவேண்டும். ஏனெனில், சமய அடிப் படையின்றி எந்த மனிதனும் வாழமுடியாது. சிலர் தங்களுடைய அறிவின் ஆணவம் காரணமாக, தங்களுக்கு சமயத்துடன் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று வாதிக்கிறார் கள். தான் மூச்சு விடுவதாகவும், ஆனால் தனக்கு மூக்கு இல்லை என்றும் ஒருவன் கூறுவது போல இது இருக்கிறது. பகுத் தறிவின் மூலமோ, இயல்பான உணர்ச்சியின் மூலமோ அல்லது மூட நம்பிக்கை காரணமாகவோ ஏதாவதொரு வகையில் மனிதன், தனக்கு தெய்விகமான தொடர்பு இருப்பதை ஒப்புக் கொள்கிறான். மூதல்தரமான சந்தேகவாதியோ அல்லது நாத் திகரோ கூட, ஒரு தார்மிகக் கொள்கையின் அவசியத்தை ஒப்புக் கொள்கிறார்கள்; அக்கொள்கையை அனுசரிப்பதே நல்லது என்றும் அதை அனுசரிக்காமல் இருப்பது தீங்கு என்றும் கருதுகிறார்கள். பிராட்லாவின் நாத்திகம் எல்லோரும் அறிந்ததே. ஆனால் அவர்கூட, உண்மையைப் பேச வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். உண்மையைப் பேசியதற்காக மிகுந்த துன்பத்திற்கும் உள்ளானார். அதனால்தான் மதத்தை மறுக்கும் ஒரு மனிதன்கூட மதமின்றி வாழ்வதில்லை, வாழ முடியாது என்று நான் கூறியுள்ளேன்.

பிரார்த்தனை மனிதனுடைய வாழ்க்கையின் உயிர்நாடி யாகும். கடவுளை வேண்டிக்கொள்வதே பிரார்த்தனை; அல்லது பரந்த அர்த்தத்தில் உள்ளுக்குள் இறைவனுடன் தொடர்பு

கொள்வதும் பிரார்த்தனையே. எப்படியிருந்தாலும் பலன் ஒன்று தான். வேண்டிக்கொள்வதாக இருந்தால்கூட, ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும்படியும், அதைச் சூழ்ந்து கொண்டுள்ள அறியாமையையும் இருட்படலங்களையும் போக்கும் படியும் வேண்டிக்கொள்வதாகவே இருக்கவேண்டும், தன்னிடமுள்ள தெய்விகத்தன்மை விழிப்படையவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவன், பிரார்த்தனையின் உதவியை நாடித்தான் தீரவேண்டும். வெறும் சொற்களின் அலங்காரமோ அல்லது காதுகளுக்குப் பயிற்சி அளிப்பதோ பிரார்த்தனை அல்ல; அர்த்தமற்ற சூத்திரத்தைத் திரும்பத் திரும்பக்கூறுவதும் பிரார்த்தனை அல்ல.

ராமநாமத்தை எத்தனை தடவைகள் திரும்பத் திரும்பக் கூறினாலும், அது ஆன்மாவைக் கிளறவில்லையாயின், அது வீணேயாகும். இருதயமற்ற வார்த்தைகளைக்காட்டிலும் வார்த்தைகளற்ற இருதயமே பிரார்த்தனைக்குச் சிறந்தது. பசியுள்ள மனிதன் நல்ல உணவை மனதார ருசிப்பது போல, பசியுள்ள ஆன்மா மனமார்ந்த பிரார்த்தனையை ருசித்து அனுபவிக்கும். பிரார்த்தனையின் மந்திர சக்தியை அனுபவித்தவன் சேர்ந்தாற் போல் நாட்கணக்கில் உணவின்றி வாழமுடியும்; ஆனால் பிரார்த்தனையின்றி ஒரு விநாடிகூட வாழமுடியாது. ஏனெனில், பிரார்த்தனையின்றேல், உள்ளத்தில் அமைதி இருக்கமுடியாது. எனது அனுபவத்தையும், எனது சகாக்களின் அனுபவத்தையுமே இப்போது நான் கூறியுள்ளேன்.

அப்படியாயின், நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் நாம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கவேண்டும் என்று சிலர் கூறலாம். அதில் சந்தேகமே இல்லை. ஆனால், தவறும் இயல்புள்ள மனிதர்களாகிய நாம், நம் உள்ளேயே அடங்கி ஒருவிநாடி

கூட இறைவனுடன் தொடர்புகொள்ளும் சக்தியற்றவர்களாக இருக்கிறோம். அப்படியிருக்க, கடவுளுடன் இடைவிடாது தொடர்பு வைத்துக்கொள்வது என்பது நமக்கு அசாத்தியமாகும். ஆகையால் நாம், சிறிது நேரமாவது உலக பந்தங்களையெல்லாம் உதறித்தள்ள கடுமையான முயற்சி செய்வதற்காக சில காலங்களை நிர்ணயித்துக்கொள்கிறோம்; சிறிது நேரமாவது உடலை மறந்திருக்கத் தீவிரமாக முயற்சிக்கிறோம்.

பிரார்த்தனையின் அவசியத்தைப் பற்றி நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதன்மூலம், பிரார்த்தனையின் சாரம் என்ன என்பதையும் கூறியிருக்கிறேன். நமது சக மனிதர்களுக்குத் தொண்டு செய்யவே நாம் பிறந்திருக்கிறோம். நாம் மிகவும் விழிப்புடன் இருந்தாலன்றி, நாம் ஒழுங்கான முறையில் தொண்டு செய்யமுடியாது. இருளின் சக்திக்கும் ஒளியின் சக்திக்கும் மனிதனின் உள்ளத்தில் நிரந்தரமான போராட்டம் நடந்து வருகிறது. பிரார்த்தனை என்ற பெரிய நங்கூரத்தின் உதவி இராதவன், இருளின் சக்திக்கு இரையாகி விடுவான். பிரார்த்தனை செய்யும் மனிதன் தனக்குள்ளும் உலகம் முழுவதுடனும் சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ்வான். பிரார்த்தனையில் ஈடுபடும் உள்ளம் இல்லாமல் உலக விஷயங்களில் ஈடுபடுபவன் தன்னையும் துன்பத்திற்கு உள்ளாக்கி, உலகத்தையும் கூடத் துன்பத்திற்குள்ளாகும்படி செய்வான். மரணத்திற்குப் பின் மனிதனின் நிலையில் பிரார்த்தனையின் சம்பந்தம் ஒருபுறம் இருக்க, மனிதர்கள் வாழும் இந்த உலகிலேயே பிரார்த்தனை அளவு கடந்த பலனைக் கொடுப்பதாக இருக்கிறது. நமது தினசரி நடவடிக்கைகளில் ஒழுங்கும், அமைதியும் நிலவும்படி செய்வதற்குரிய ஒரே வழி பிரார்த்தனை தான்.

நாங்கள் சத்தியத்தை நாடியே ஆசிரம வாழ்வை மேற்கொண்டோம். சத்தியத்தை வற்புறுத்துவது, பிரார்த்தனையின்

சக்தியில் உள்ள நம்பிக்கையைப் பிரகடனப்படுத்துவதேயாகும் எனினும், இதுவரையில் பிரார்த்தனையை நாங்கள் இன்றியமையாத ஓர் அடிப்படைச்செயலாக அமைத்துக்கொள்ளவில்லை. ஒருநாள் நான் தூக்கமயக்கத்திலிருந்து எழுந்தபோது, பிரார்த்தனை விஷயத்தில் எனது கடமையை வருந்தத்தக்க முறையில் அலட்சியம் செய்துவிட்டதாக உணர்ந்தேன். அன்று முதல் ஆசிரமப் பிரார்த்தனை விஷயத்தில் கண்டிப்பான ஒழுங்கு முறைகளைக் கைக்கொள்ளும்படி யோசனை கூறினேன். அதனால் நமது நிலைமை அதிகச்சீர்பெற்றிருக்கிறது. அடிப்படையான விஷயத்தில் அக்கறை கொண்டுவிட்டால் மற்ற விஷயங்கள் யாவும் தாமாகவே சீர்ப்பட்டுவிடும். ஒரு சம சதுரத்தின் ஒரு கோணத்தைச் சரிப்படுத்திவிட்டால், மற்றகோணங்கள் தாமாகவே சரியாகிவிடும் அல்லவா?

எனவே நீங்கள் ஒவ்வொரு நாளையும் பிரார்த்தனையுடன் தொடங்கவேண்டும்; மனம் ஒன்றிச்செய்யும் வழிபாடு மாலை வரையில் மனதில் நிலைத்திருக்கும். நாள்தோறும் படுக்கச் செல்லும்போதும் பிரார்த்தனை செய்யுங்கள்; கெட்ட கனக்களும் அச்சமும் இல்லாமல் இரவை அமைதியாகக் கழிக்கலாம். வழிபாட்டு முறையைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. பிரார்த்தனை எந்த விதத்தில் வேண்டுமானாலும் இருக்கட்டும்; அது நம்மைத் தெய்விகத் தொடர்பு கொள்ளும்படி செய்வதாக இருக்கவேண்டும். முறை எப்படியிருந்த போதிலும் பிரார்த்தனை செய்யும்போது உங்களுடைய மனம் எங்கேயாவது சுற்றி அலைந்து கொண்டிருக்கக் கூடாது.

நான் இதுவரையில் கூறியது உங்கள் மனத்தில் பதிந்திருக்குமாயின், உங்களுடைய பிரார்த்தனையில் அக்கறை எடுத்துக்கொண்டு, அதை ஒரு முக்கிய கடமையாகச் செய்யும்படி

உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். தனக்குத்தானே விதித்துக் கொள்ளும் கட்டுப்பாடு வற்புறுத்தல் ஆகாது. ஒரு மனிதன் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலையை விரும்புவானாயின், அதாவது தன் உணர்ச்சிகளுக்கெல்லாம் இடம் கொடுத்து விடுவானாயின், அவன் வெறி உணர்ச்சிகளுக்கு முற்றிலும் அடிமையாகி விடுவான். விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்பவன்தான் உண்மையான விடுதலை பெறுகிறான். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியன யாவும் சில விதிகளுக்கு உட்பட்டே இயங்குகின்றன. இந்த விதிகளின் கட்டுப்பாடு இல்லாவிடில், உலகம் ஒரு விநாடிகூட இயங்காது. உங்களுடைய சக மனிதர்களுக்குத் தொண்டு செய்வதே உங்கள் வாழ்க்கையின் லட்சியமாகும். எனவே, நீங்களே உங்களுக்கு ஏதாவதொருவித ஒழுங்கு முறையை வகுத்துக் கொள்ளாவிடில், நீங்கள் சீர்குலைந்து போவீர்கள். பிரார்த்தனை அவசியமான, ஆன்மிக ஒழுங்கு முறையாகும். ஒழுங்கும் கட்டுப்பாடும்தான், நம்மை மிருக வர்க்கத்தில் இருந்து வேறுபடுத்துகின்றன. நாம் மிருகங்களைப்போல் ஊர்ந்து செல்லாமல் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நடக்கவேண்டுமாயின், நம்மை நாமே வலுவில் ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

"எங் இந்தியா" 23-1-1930.

3 சக்தி வாய்ந்த கருவி

லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காகக் காந்திஜி 'ராஜபுதனு' கப்பலில் சென்றபோது, தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பிரார்த்தனைகள் நடந்தன. காலைப் பிரார்த்தனை அதிகாலையில் நடந்ததால், அதில் அதிகமாக எவரும் கலந்து கொள்ளவில்லை. மாலைப் பிரார்த்தனையில் இந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், சீக்கியர்கள் சுமார் நாற்பது பேரும், சில ஐரோப்பியர்களும் கலந்து கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, பிரார்த்தனை முடிந்த பின் காந்திஜி பதினைந்து நிமிடநேரம் பேசுவது வழக்கம். இறுதியில் கேட்கப்படும் ஒரு கேள்விக்கு காந்திஜி மறுநாள் பதில் அளிப்பார். பிரார்த்தனை சம்பந்தமாக தமது சொந்த உதாரணத்தைக் கூறும்படி, அதாவது பிரார்த்தனையின் பலனுகத் தமக்கு ஏற்பட்ட உணர்ச்சியையும், அனுபவத்தையும் குறிப்பிடும்படி ஒரு நாள் முஸ்லிம் இளைஞர் ஒருவர் காந்திஜியைக்கேட்டார். அந்தக் கேள்வியை காந்திஜி பாராட்டியதோடு மனநிறைவுடன் தமது அனுபவத்தை விவரித்தார். காந்திஜி கூறியதாவது :

"என் உயிரையே காப்பாற்றி வந்திருப்பது பிரார்த்தனைதான். பிரார்த்தனையின்றேல், நீண்டகாலத்திற்கு முன்பே எனக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். என் பொது வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் மிகக் கசப்பான அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டன என்பதை என் சுயசரிதையிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம். அவை எனக்குத் தாற்காலிகமாக மனச்சோர்வை உண்டாக்கின. எனினும், நான் அந்தச் சோர்வை அகற்றும் ஆற்றல் பெற்றிருந்தேனெனில், அதற்குக் காரணம் பிரார்த்தனைதான்.

"சத்தியம், எனது வாழ்க்கையின் ஓர் அம்சமாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால், பிரார்த்தனை அவ்விதம் இல்லை. அவசியம் காரணமாகவே என் வாழ்க்கையில் பிரார்த்தனைக்கு இடம் ஏற்பட்டது. பிரார்த்தனை இன்றேல், நான் மனநிறைவுடன் இருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டதே அதற்குக் காரணமாகும். எனக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கை எவ்வளவுக்கு அதிகமாயிற்றோ, அவ்வளவுக்கு பிரார்த்தனையில் உள்ள ஆர்வமும் அடக்க முடியாததாகிறது. பிரார்த்தனை இல்லாத வாழ்வு மந்தமாகவும், சூன்யமாகவும் தோன்றியது. தென்னாப்பிரிக்காவில் கிறிஸ்தவர்களின் பிரார்த்தனைக்கு நான் சென்றிருந்தேன். ஆனால், அது என்னைக் கவரவில்லை. பிரார்த்தனையில், என்னால் அவர்களுடன் கலந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் கடவுளை மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். என்னால் அவ்விதம் செய்ய முடியவில்லை. அம்முயற்சியில் நான் படு தோல்வியே அடைந்தேன். கடவுளிடத்திலும் பிரார்த்தனையிலும் நம்பிக்கையின்றியே நான் வாழ்க்கையைத் தொடங்கினேன், அதன் காரணமாக அந்தச் சிறிது காலத்தில் என் வாழ்க்கையில் சூன்ய நிலை எதுவும் எனக்குத் தோன்றவில்லை. ஆனால், வாழ்க்கையின் பிற்பகுதியில், உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு, ஆன்மாவுக்குப் பிரார்த்தனை அவசியம் என்பதை உணர்ந்தேன். உண்மையில் பிரார்த்தனை ஆன்மாவுக்கு எவ்வளவு இன்றியமையாததோ உடலுக்கு உணவு அவ்வளவு அவசியமாயில்லை. ஏனெனில், உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுவதற்கு அடிக்கடி பட்டினி கிடக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால், பிரார்த்தனைப் பட்டினி என்று எதுவுமே இல்லை. உணவு மிதமிஞ்சிப் போவதைப் போல, பிரார்த்தனையில் மிதமிஞ்சுவது என்பதற்கே இடமில்லை.

"பிரார்த்தனையின் மூலமே தாங்கள் ஒளியைக் கண்டதாகவும், அது இல்லாமல் தாங்கள் உயிர் வாழமுடியாது என்றும்

புத்தர், ஏசுநாதர், முகமதுநபி இந்த மூன்று மாபெரும் சமயத் தோன்றல்களும் ஆட்சேபணைக்கு இடமின்றி நிருபித்திருக்கிறார்கள். இன்றும், கோடிக்கணக்கான ஹிந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் பிரார்த்தனை ஒன்றின் மூலமே ஆறுதல் அடைகிறார்கள். அவர்களையெல்லாம் பொய்யர்கள் என்றோ அல்லது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுபவர்கள் என்றோ நீங்கள் கூறலாம். அப்படியாயின், சத்தியத்தை நாடுபவனான எனக்கு அந்தப் 'பொய்' தான் என் வாழ்க்கைக்கே ஓர் ஊன்றுகோலாகியிருக்கிறது என்று நான் கூறுவேன். அந்த ஊன்றுகோலின்றி ஒரு விநாடிகூட உயிர்வாழ முடியாது. அரசியல் வானில் நம்பிக்கையற்ற நிலை என்னை எதிர் நோக்கியிருந்தும்கூட, நான் ஒருபோதும் என் மன அமைதியை இழந்துவிடவில்லை. உண்மையில், என் மன அமைதியைக் கண்டு பொறாமைப்பட்டோரும் இருந்தார்கள். பிரார்த்தனையிலிருந்தே அத்தகைய அமைதி வருகிறது என்பதை உங்களுக்கு நான் கூறுகிறேன். நான் மெத்தப் படித்தவன் அல்ல; ஆனால் பிரார்த்தனையில் பூரண நம்பிக்கையுடையவன் என்பதைப் பணிவுடன் கூறிக் கொள்ளுகிறேன். பிரார்த்தனை செய்யும் முறையைப் பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை. அவ்விஷயத்தில், ஒவ்வொருவரும் அவரவர் இஷ்டப்படி ஒரு விதியைப் பின்பற்றலாம். எனினும், நன்றாகப் பழக்கப்பட்ட சில சாலைகள் இருக்கின்றன. பண்டைய முனிவர்களும், ஞானிகளும் சென்று பழகிய சாலைகளில் நடந்து செல்லுவதே பாதுகாப்பானது. எனது அனுபவ வாயிலாகக் கண்டவற்றை நான் கூறிவிட்டேன். ஒவ்வொருவரும் தானாக முயன்று பார்க்க வேண்டும். எதனுடனும் ஒப்பிட முடியாததான ஒரு பேரின்ப அமைதியை நாள் தவறாமல் வழிபடுவதனால் தத்தம் வாழ்வில் அடைவார்களாக."

மறுநாள் மாலை ஓர் இளைஞன் கேட்டதாவது: "கடவுளிடத்தில் நம்பிக்கையுடன் நீங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தீர்கள். நாங்களோ நம்பிக்கையின்றி வாழ்க்கையை ஆரம்பிக்கிறோம். நாங்கள் எப்படிப் பிரார்த்திப்பது?"

காந்திஜி: "கடவுளிடத்தில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படி செய்வது, என் சக்திக்கு அப்பாற்பட்டது. உலகில் சில விஷயங்கள் இருக்கின்றன. அவை தாமாகவே நிருபிக்கப் படுவதாக இருக்கின்றன; சிலவற்றை நிருபிக்க இயலாது. கடவுள் இருப்பது, க்ஷேத்திர கணிதத்தில் ஒரு சூத்திரம் போன்றதல்ல. அது, நமது இருதயத்தின் பிடிக்கு அப்பாற் பட்டதாக இருக்கலாம். இவ்விஷயத்தில் அறிவை அடிப் படையாகக் கொண்ட முயற்சிகள் பெரும்பாலும் தோல்வி அடைந்துள்ளன. பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்ட விளக்கம், உங்களிடத்தில் கடவுள் நம்பிக்கையை உண்டாக்கி விட முடியாது. ஏனெனில், அது பகுத்தறிவின் பிடிக்கு அப்பாற்பட்டது. உலகத்தில் தென்படும் அசாதாரணமான அற்புதங்களிலிருந்து, கடவுள் இருப்பதை அறிவினால் அறிந்து கொள்ள முடியும். அவ்விஷயத்தில், பகுத்தறிவைக் கொண்டு நான் விளக்கம் கூற முற்படுவது, உங்கள் அறிவுடைமையை அவமதிப்பதாகும். எனவே, பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்ட விளக்கங்களையெல்லாம் நீங்கள் புறக்கணித்துவிட்டு, கடவுளிடத்தில் குழந்தையைப் போல் நம்பிக்கை வைக்க முற்பட வேண்டும். நான் இருப்பது உண்மையாயின், கடவுள் இருப்பதும் உண்மையே. கோடிக்கணக்கானவர்களுக்கு வாழ்க் கையில் அது அவசியமாக இருப்பதுபோல, எனது வாழ்க்கை யிலும் அது இன்றியாமையாமல் இருக்கிறது. அதைப்பற்றி அவர்கள் பேசமுடியாதவர்களாக இருக்கலாம். எனினும், அது அவர்களுடைய வாழ்க்கையின் ஓர் அம்சமாகப் பின்னிக்

கிடப்பதை அவர்கள் வாழ்க்கையிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம். பாழாக்கப்பட்டுவிட்ட நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்று மாத்திரமே நான் கேட்கிறேன். அவ்விதம் செய்யவேண்டுமாயின், நீங்கள் கற்றுக்கொண்ட, உங்களுடைய அறிவை மயக்கி, உங்களைத் தடுமாறச்செய்யும் இலக்கியங்களையெல்லாம் நீங்கள் மறந்துவிட வேண்டும். நம்பிக்கை, பணிவின் அடையாளமாகும். நமக்கு ஒன்றுமே தெரியாது என்பதையும், இந்த உலகில் நாம் அணுவினும் தாழ்ந்தவர்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளுவதே நம்பிக்கையாகும். அத்தகைய நம்பிக்கையுடன் நாம் தொடங்கவேண்டும். நாம் அணுக்களையும் விடத் தாழ்ந்தவர்கள் என்று நான் ஏன் கூறுகிறேன் என்றால், அணுஅதை இயற்றிய இயற்கையின் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறது. ஆனால், நாமோ, அறியாமையினாலும், ஆணவத்தினாலும் இயற்கையின் விதியை மறுக்கிறோம். இதற்குமேல் நம்பிக்கை இல்லாதவர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய விதத்தில் வாதிக்க எனக்குத்தெரியாது.

“கடவுள் இருப்பதை நீங்கள் ஒப்புக்கொண்டுவிட்டால், பிரார்த்தனையின் அவசியம் தவிர்க்க முடியாததாகிவிடும். நம்முடைய வாழ்க்கை முழுவதும் ஒரு பிரார்த்தனையே என்றும், எனவே, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிரார்த்தனை செய்வதற்காக நாம் உட்காரவேண்டிய அவசியம் இல்லை என்றும் சாதித்து நாம் எவரையும் திகைப்பூட்டாமல் இருப்போமாக. ஆதி அந்த மற்ற பரம்பொருளுடன் எப்போதும் தொடர்புகொண்டிருந்தவர்கள்கூட, தாங்கள் அவ்விதம் சாதித்திருப்பதாகக் கூறியதில்லை. அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் இடைவிடாத பிரார்த்தனையாகவே இருந்திருக்கிறது. எனினும் அவர்கள் நம்போன்றோருக்காகக் குறிப்பிட்ட நேரத்தில் பிரார்த்தனை செய்து, ஒவ்வொரு நாளும் கடவுளிடம் விசுவாசப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு வந்தார்கள். அவ்விதம் நாம் உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும்

என்று கடவுள் வற்புறுத்தவில்லை. எனினும், நமது பிரதிக்ஞையை நாம் ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்து வந்தோமானால் வாழ்க்கையில் நிகழக்கூடிய எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறுவோம் என்று உறுதி கூறுகிறேன்."

'எங் இந்தியா' 24–9–1931

காந்திஜி எல்லைப்புற மாகாணத்தில் யாத்திரை செய்து கொண்டிருந்த போது, பெஷாவரில் உள்ள இஸ்லாமியா கல்லூரிப் பேராசிரியர் அவரைக் கண்டு "காந்திஜிக்கு கண்கூடான அனுபூதி ஏதாவது ஏற்பட்டது உண்டா" என்று கேட்டதற்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது :

"கண்கூடு என்றும், அனுபூதி என்றும் நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், என் வாழ்க்கையில் ஏற்பட்ட ஓர் அனுபவத்தை உங்களுக்கு கூறுகிறேன். சிறையில் நான் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதை அறிவித்த போது, அதன் சாதக பாதகங்களைப் பற்றி நான் சிந்திக்கவில்லை. முதல்நாள் இரவு நான் படுக்கச் சென்ற போது, மறுநாள் காலையில் 21 நாட்கள் உண்ணாவிரதத்தைப் பற்றி நான் அறிவிக்கப் போகிறேன் என்ற எண்ணமே எனக்கில்லை. எனினும், நடுநிசியில் ஒரு குரல் என்னை எழுப்பி, 'உண்ணாவிரதம் இரு' என்று கூறியது. 'எத்தனை நாட்கள்?' என்று நான் கேட்டேன். '21 நாட்கள்' என்று பதில் வந்தது. உண்ணாவிரதம் இருப்பதற்கு அப்போது நான் தயாராக இல்லை; அதில் அப்போது எனக்கு நாட்டமும் இல்லை. ஆனால் நான் உண்ணாவிரதம் இருக்கும்படி கூறிய அந்தக்குரல் தெளிவாக எனக்குக் கேட்டது.

"வாழ்க்கையில் நான் செய்த குறிப்பிடத்தக்க காரியங்கள் எதுவாயினும், அதை நான் பகுத்தறிவால் தூண்டப்பட்டு செய்யவில்லை; உள் உணர்வினுல் தூண்டப்பட்டே செய்தேன். அந்த உணர்வை நான் கடவுள் என்றே கூறுவேன். 1930-இல் நிகழ்ந்த தண்டி உப்புச் சத்தியாக்கிரகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உப்புச் சட்டத்தை மீறுவதால் என்ன பலன் ஏற்படும் என்பது பற்றி எனக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை. பண்டித மோதிலால்ஜியும் மற்ற நண்பர்களும் என்மீது கோபமடைந்தார்கள். நான் என்ன செய்யப்போகிறேன் என்பதை அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு நானும் எதுவும் கூறமுடியவில்லை. ஏனெனில், எனக்கே அதைப்பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. எனினும், அந்த எண்ணமானது என் மனத்தில் மின்னல் போல் தோன்றியது. பின்னர் உப்புச் சத்தியாக்கிரகம், ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரையில் நாடு முழுவதையுமே உலுக்கிவிட்டதென்பது உங்களுக்குத் தெரியும்.

"கடைசியாக, இன்னும் ஒரு விஷயத்தைக் கூறிவிடுகிறேன். 1919 ஏப்ரல் 6-ஆம் தேதியை உண்ணுவிரத தினமாகவும், பிரார்த்தனை தினமாகவும் அனுசரிக்கவேண்டும் என்று அறிவிப்பதுபற்றி கடைசிநாள் வரையில் எனக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை ஆனுல், அதைப்பற்றி நான் கனவு கண்டேன். 1930-இல் நிகழ்ந்ததுபோல் குரலோ, தோற்றமோ எதுவுமில்லை. அவ்விதம்தான் செய்யவேண்டும் என்று தோன்றியது. அவ்வளவுதான்; மறுநாள் காலையில் அதை ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரிடம் கூறினேன். பிறகு அதைத் தேசத்திற்கும் அறிவித்தேன். அதற்கு மக்கள் எவ்வளவு ஆச்சரியகரமான விதத்தில் ஆதரவு அளித்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்."

'ஹரிஜன்' 14-5-1938.

4 ஆசிரம வாழ்க்கையில் பிரார்த்தனை

சத்தியத்தை வற்புறுத்துவது ஆசிரமத்தின் ஆணிவேர் எனில், அந்த வேருக்கு முக்கியமான உணவு பிரார்த்தனைதான். ஒவ்வொருநாளும் ஆசிரமவாசிகளின் நடவடிக்கைகள் விடியற் காலை 4-15லிருந்து 4-45 வரையில் கூட்டுப் பிரார்த்தனையுடன் தொடங்கி, 7-லிருந்து 7-30 வரையில் மாலைப் பிரார்த்தனையுடன் முடிவடைகின்றன. ஆசிரமம் நிறுவப்பட்டதிலிருந்து எனக்குத் தெரிந்தவரையில் பிரார்த்தனையின்றி ஒருநாள் கூடக்கழிந்த தில்லை. பல சந்தர்ப்பங்களில் மழை காரணமாக, பொறுப்பான ஒரே ஒருவர் மாத்திரமே பிரார்த்தனைத் திடலுக்கு வந்ததுண்டு. நோய் அல்லது அது போன்ற தவிர்க்க இயலாத காரணம் இருந் தாலன்றி ஆசிரமவாசிகள் அனைவரும் பிரார்த்தனைக்கு வர வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். மாலைப்பிரார்த்தனை சம்பந்தப்பட்ட வரையில் எதிர்பார்க்கிறபடி அநேகமாக எல்லோரும் வருவது உண்டு. ஆனால், காலைப்பிரார்த்தனையைப் பற்றி அவ்விதம் கூறுவதற்கில்லை.

காலைப் பிரார்த்தனைக்கான நேரம் 4, 5, 6, 7 மணி என்று ஒவ்வொன்றுகச் சோதனை செய்து பார்க்கப்பட்டது. ஆனால், அவ்விஷயத்தில் நான் மிகவும் கண்டிப்பாக இருந்ததால், கடைசி யாகப் பிரார்த்தனை நேரம் 4-20 என்று நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. 4 மணிக்கு முதல் மணி அடித்ததும் எல்லோரும் படும் கையிலிருந்து எழுந்துவிடுகிறார்கள்; கைகால்களைச் சுத்தக் செய்துகொண்டு 4-20 மணிக்கு பிரார்த்தனைத் திடலுக்கு வந்து விடுவார்கள்.

இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் ஒருவர் எவ்வளவு அதிகாலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கிறரோ, அவ்வளவுக்கு அது மிகவும் நன்மையாகும் என்பது எனது நம்பிக்கை. விவசாயி நேரம் கழித்து எழுந்தால், அவரது பயிர்களுக்குச் சேதம் உண்டாகும். கால்நடைகள் அதிகாலையில் தான் கவனிக்கப்படுகின்றன. பசுக்களையும், அதிகாலையில்தான் பால் கறக்கிருர்கள். அவ்விதமிருக்க, சத்தியத்தைப் பாதுகாக்க முற்படுவோர், மக்களின் ஊழியர்கள் அல்லது துறவிகள் முதலியோர் அதிகாலையில் 2 அல்லது 3 மணிக்கு எழுந்துவிடலாம். அவர்கள் அவ்விதம் எழுந்திராவிடில் அது ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கும். உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் கடவுள் அடியார்களும், விவசாயிகளும் அதிகாலையில் எழுந்து விடுகிருர்கள். பக்தர்கள் அதிகாலையில் கடவுளைத் தோத்திரம் செய்கிருர்கள். விவசாயிகள் வயல்களில் வேலை செய்கிருர்கள். அதனுல் அவர்களுக்கும் நன்மை; உலகத்திற்கும் நன்மை. அவ்விருவரும் பக்தர்கள் என்பதே என் கருத்தாகும். பக்தர்கள் தெரிந்தே கடவுளை வணங்குகிருர்கள். விவசாயிகளோ, தங்களுடைய உழைப்பின் மூலம் தாங்கள் அறியாமலேயே கடவுளை வழிபடுகிருர்கள். உலகத்திற்கு உணவு கிடைப்பதற்கு அவர்களுடைய உழைப்பு உதவியாக இருக்கிறது அல்லவா? விவசாயிகள் தங்களுடைய வயல்களில் உழைப்பதற்குப் பதிலாக இறைவனைத் தியானம் செய்ய முற்படுவார்களாயின், அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்யத் தவறியவர் ஆவார்கள். அதன் விளைவாக, அவர்களுக்கும் உலகத்திற்கும் அழிவு ஏற்படும்.

விவசாயியை ஒரு பக்தராக நாம் கருதலாம், அல்லது கருதாமலிருக்கலாம். ஆனுல் விவசாயிகள், தொழிலாளர்கள் முதலிய மற்றவர்கள் விரும்பியோ அல்லது விரும்பாமலோ அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியவர்களாக இருக்கிருர்கள். அப்படியிருக்க,

சத்தியத்தை வழிபடுவோர் அல்லது மக்களின் ஊழியர் எப்படி காலம் கடந்து படுக்கையிலிருந்து எழுந்திருக்க முடியும்? தொண்டிற்கும், கடவுள் வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும்படியாகச் செய்ய ஆசிரமத்தில் உள்ள நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். எனவே, ஆசிரமத்தில் உடல் நலமுள்ள அனைவரும், கஷ்டமாக இருந்தால்கூட, விடியற்காலை 4 மணிக்கு எழுந்துவிட வேண்டும் அதிகாலை 4 மணி என்பது அதிக விடியற்காலம் அல்ல. 4 மணிக்கு முன் எழுந்திராவிட்டாலும் அதிகமாகப் போனால் 4 மணிக்காவது நாம் எழுந்து நமது அலுவல்களைத் தொடங்கிவிட வேண்டும்.

அதன் பின்னர், சில விஷயங்களைப் பற்றி நாங்கள் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டியிருந்தது. எந்த இடத்தில் பிரார்த்தனை செய்ய வேண்டும்? நாங்கள் அதற்காக ஓர் ஆலயத்தை நிர்மாணிப்பதா அல்லது வெட்டவெளியில் கூடிப் பிரார்த்திப்பதா? ஒரு மேடையை அமைக்க வேண்டுமா? பிரார்த்தனை செய்யும் இடத்தில் ஏதாவது விக்கிரகங்கள் இருக்க வேண்டுமா? கடைசியில், வானத்தையே கூரையாகக் கொண்டு மணலில் உட்காருவது என்றும், விக்கிரகம் எதுவும் வைத்துக் கொள்வதில்லை என்றும் தீர்மானித்தோம். ஆசிரமம் அனுசரித்து வரும் முறை ஏழ்மையேயாகும். பட்டினி கிடக்கும் கோடிக் கணக்கான மக்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே ஆசிரமம் இருக்கிறது மற்றவர்களைப் போல் ஏழைகளுக்கும் ஆசிரமத்தில் இடம் உண்டு, ஆசிரம விதிகளுக்கு உட்பட்டு நடக்க விரும்பும் எல்லோரையும் ஆசிரமம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. அத்தகைய ஒரு நிறுவனத்தில், கடவுளை வழிபடும் இடத்தைக் கற்களாலும் சுண்ணாம்பினாலும் கட்டுவது முடியாத காரியம், அதற்கு வானம்தான் கூரையாகும்; ஆசிரமவாசிகளின் விடுதிகள்

தான் சுவர்களும் தூண்களுமாகும். ஒரு மேடை எழுப்பத் திட்டமிட்டோம்; ஆனால் பின்னர் அந்த யோசனை கைவிடப் பட்டது. பிரார்த்தனையில் எத்தனை பேர் கலந்து கொள்ளு வார்கள் என்பது நிர்ணயமாகத் தெரியாததே அதற்கு காரணம். பெரிய மேடையாக எழுப்பினால், பணச்செலவு அதிகமாகும். பிரார்த்தனைக்காக ஒரு விடுதியோ அல்லது ஒரு மேடையோ கூட நிர்மாணிக்காமல் இருப்பதே சிறந்த தீர்மானம் என்பதை அனுபவத்தில் தெரிந்து கொண்டோம். ஆசிரமத்தில் நடை பெறும் பிரார்த்தனைக்கு வெளியிலிருந்தும் மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். எனவே, சிற்சில சமயங்களில் வரும் மக்கள்தொகையைப் பார்த்தால், எவ்வளவு பெரியமேடையாக அமைத்தாலும் இடம் போதாது என்று தோன்றிற்று.

நான் செல்லும் இடங்களிலெல்லாம் காலையிலும் மாலை யிலும் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. குறிப்பாக மாலைப் பிரார்த்தனைக்கு ஏராளமான மக்கள் வருகின்றனர். எனவே, அத்தகைய சந்தர்ப்பங்களில் வெட்ட வெளியில் பிரார்த்தனையை நடத்துவதுதான் முடியக்கூடியது. பிரார்த்தனை மண்டபத்தில் மாத்திரமே பிரார்த்தனையை நடத்துவது என்ற வழக்கத்தை நான் கடைப்பிடித்து வந்திருப்பேனாயின், எனது யாத்திரை களின்போது பொதுமக்கள் கலந்து கொள்ளும் பிரார்த்தனைகளைப் பற்றி நான் ஒருபோதும் சிந்தித்திருக்க முடியாது

இதைத் தவிர, ஆசிரமத்தில் எல்லா மதங்களுக்கும் சமமான மரியாதை அளிக்கப்படுகிறது. சகல மதத்தினரும் அங்கு வரவேற்கபபடுகின்றனர். அவர்களுக்கு விக்கிரக ஆரா தனையில் நம்பிக்கை இருந்தாலும் இராவிட்டாலும், வேற்றுமை எதுவும் பாராட்டுவதில்லை. யாருடைய உணர்ச்சியும் புண்படக் கூடாது என்பதற்காகப் பிரார்த்தனைக் கூட்டத்தில் விக்கிரகம்

எதையும் வைத்துக்கொள்ளுவதில்லை. எனினும், ஆசிரமவாசிகளில் யாராவது தமது அறையில் ஒரு விக்கிரகத்தை வைத்துக் கொள்ள விரும்பினால், அதற்கு எவ்விதத் தடையுமில்லை.

காலைப் பிரார்த்தனையில் நாங்கள் முதலில் ஆசிரம பஜனாவளியில் உள்ள சுலோகங்களை வாசிக்கிறோம். பிறகு ராமநாம பஜனை செய்தபின், கீதை பாராயணம் செய்கிறோம். மாலையில் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் உள்ள கடைசி 19 சுலோகங்களைப் பாராயணம் செய்வதுடன், ராமநாம பஜனை செய்கிறோம். அதிக நேரம் ஆகக்கூடாது என்பதற்காகவோ சத்தியத்தை வணங்குவோர் அல்லது ஹிந்து அல்லாதவர்கள் அவற்றைக் கூறமுடியாது என்பதற்காகவோ அந்த சுலோகங்களை பாராயணம் செய்வதைக் குறித்து அடிக்கடி ஆட்சேபணைகள் எழுந்தது உண்டு. ஹிந்து சமுதாயத்தில் மாத்திரமே அந்த சுலோகங்கள் பாராயணம் செய்யப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. எனினும், ஹிந்து அல்லாத ஒருவர் அதில் ஏன் கலந்துகொள்ளக்கூடாது? அந்த சுலோகங்களைக் கூறிப்பிரார்த்தனை செய்யும் போது, அந்த இடத்தில் அவரும் ஏன் இருக்கக்கூடாது? அந்த சுலோகங்களைக் கேட்ட முஸ்லிம் கிறிஸ்தவ நண்பர்கள் அவற்றைக் குறித்து ஆட்சேபிக்கவில்லை. தமது சொந்த மதத்தைப்போல் பிற மதங்களுக்கும் மரியாதை காட்டும் எவருக்கும் அந்த சுலோகங்கள் மனக் கஷ்டத்தைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவற்றில், எந்த மதத்தினரையும் அவமதிக்கக்கூடியவை எதுவுமில்லை. ஆசிரமத்தில் உள்ளவர்களில் பெரும்பாலோர் ஹிந்துக்கள் ஆதலால், ஹிந்துக்களின் தெய்விக நூல்களிலிருந்தே சுலோகங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கிறது. ஹிந்து அல்லாத வேத நூல்களிலிருந்து எதையும் பாடுவது கிடையாது என்ப

தில்லே. சில சந்தர்ப்பங்களில் இமாம் சாகிப், திருக்குரானிலிருந்தும் பிரார்த்தனேக் கீதங்களேப் பாடுவார். முஸ்லிம், கிறிஸ்தவ கீதங்களும் அடிக்கடி பாடப் படுவது உண்டு.

எனினும், சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டுதான், அந்த சுலோகங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன. கலேமகள், கணபதி போன்ற தெய்வங்களே வணங்குவது, சத்தியத்திற்குப் பங்கம் விளேவிப்பதாகும் என்று ஓர் ஆசிரமவாசி அடக்கத்துடனும் ஆனுல், உறுதியுடனும் வாதித்தார். வீணையைக் யைக் கையில் வைத்து வாசித்துக் கொண்டும், தாமரைப்பூவில் உட்கார்ந்து கொண்டுமிருக்கும் கலேமகள்அல்லது பெரிய தொந்தியுடனும் யானேத் துதிக்கையுடனும் இருக்கும் கணபதி முதலியோரைப் போன்ற தெய்வங்கள் இல்லே என்றும் அவர் கூறினுர். அவரது வாதத்திற்குப் பதிலாக நான் குறிப்பிட்டதாவது :

"என்னே சத்தியத்தின் பக்தன் என்று கூறிக்கொள்ளுகிறேன். எனினும், கலேமகளே, கணபதியை வழிபடும் சுலோகங்களேப் பாராயணம் செய்வதையோ அல்லது அவற்றைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதையோ நான் ஆட்சேபிக்கவில்லே. அந்த வாதத்தைக் காரணமாகக் கொண்டு நாம் சில சுலோகங்களேக் கண்டித்தோமாயின், அது ஹிந்து மதத்தின் அடிப்படையையே தாக்குவதற்குச் சமமாகும். ஹிந்து மதத்தில் கண்டிப்பதற்குரிய எதையும், அது எவ்வளவு பழமையாயினும், நாம் கண்டிக்கக்கூடாது என்பதல்ல. எனினும், அதை ஹிந்து மதத்தில் உள்ள பலவினமான, கண்டிப்பதற்குரிய ஒரு விஷய

மாக நான் கருதவில்லை. அதற்குமாருக, அதை நமது நம்பிக்கையின் சிறப்பு அம்சமாகவே நான் கருதுகிறேன். கலைமகளும் கணபதியும் தனித்தனி தெய்வங்கள் அல்ல. அவையெல்லாம் ஒரே கடவுளின் காரணப் பெயர்களேயாகும். பரம பக்தர்களான கவிகள் அந்தந்த இடத்திற்குத் தகுந்தவாறு, கடவுளின் ஒப்புயர்வற்ற குணங்களுக்கு உகந்தவாறு, பெயர்கள் கொடுத்திருக்கிருர்கள். அவர்கள் செய்ததில் தவறு எதுவுமில்லை. அத்தகைய சுலோகங்கள், கடவுளை வழிபடுவோரையோ அல்லது மற்றவர்களையோ ஏமாற்றுவதில்லை. ஒருவர் கடவுளைப்போற்றி வழிபடும்போது கடவுளை அத்தகைய போற்றுதல்களுக்கு உரியவராகவே அவர் கருதுகிருர்; அவரது கற்பனையில் உள்ள கடவுள் அங்கே இருப்பதாகவே எண்ணுகிருர். கடவுளை உருவமற்றவராகவும், குணங்கள் அற்றவராகவும் நாம் பிரார்த்தனை செய்யும்போதுகூட, அவருக்கு குணங்களை வழங்குகிரேம். குணங்களும் உருவங்கள்தான்; அடிப்படை என்னவென்ருல் கடவுள் சொற்களால் வருணிக்க முடியாதவர். பிறப்பு, இறப்பு உள்ள மனிதர்களாகிய நாம், கற்பனையின் உதவியை நாடியே தீரவேண்டியிருக்கிறது கற்பனை சில சமயங்களில் நமக்கு இடையூருகவும் அமைந்துவிடுகிறது. தூய்மையான எண்ணத்துடன், கடவுளுக்கு இருப்பதாக நாம் கற்பிக்கும் குணநலன்கள் நம்வரையில் உண்மையே. எனினும், அடிப்படையில் அவையெல்லாம் பொய்யே ஆகும். ஏனெனில், கடவுளை வருணிக்கும் முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தே தீரும். என் அறிவு இதை உணர்ந்திருக்கிறது. எனினும், கடவுளின் குணதிசயங்களைப் பற்றி நான் சிந்திக்காமல் இருக்க முடிவதில்லை. என் அறிவு, எனது உள்ளத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. பலவீனம் காரணமாக எனது உள்ளம், குணதிசயங்களுடன் கூடிய கடவுளையே ஆர்வத்துடன் நாடுகிறது என்று நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

" சென்ற பதினைந்து ஆண்டுகளாக நான் கூறிவரும் சுலோகங்கள் எனக்கு மன அமைதியைக் கொடுக்கின்றன; நன்மையாகவும் இருக்கின்றன. அவற்றில் நான் அழகையும் காவியச் சிறப்பையும் காண்கிறேன். கலைமகள், கணபதி முதலிய தெய்வங்களைக் குறித்து அறிஞர் பல கதைகள் கூறு கின்றனர். அந்தக் கதைகளால் தனிப்பட்ட பலன் உண்டு, அவற்றின் உட்கருத்தை நான் அறியேன். ஏனெனில், அவற்றை நான் ஆராய்ந்ததில்லை. என்வரையில், அவ்விதம் ஆராய்வது அவசியமென்று தோன்றவில்லை. இவ்விஷயத்தில் எனது அறியாமையே எனக்குப் பாதுகாப்பாக இருக்கலாம். நான் சத்தியத்தை நாடுவோன். எனவே, அந்த முறையில் மேற் கண்ட விஷயமாக ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. எனது கடவுளை நான் அறிந் துள்ளேன் என்பதே போதுமானது. அவர் கண்கூடாக இருப்பதை நான் இன்னும் உணரவில்லை. என்றாலும், எனது அந்த லட்சியத்தை அடைவதற்கான சரியான பாதையில் நான் சென்று வருகிறேன்."

சுலோகங்களைக் கூறிய பிறகு ஒரு பொதுப்பாடல் பாடப் பட்டு வந்தது. தென்னாப்பிரிக்காவில் பொதுப்பாடல் மாத் திரமே பாடப்படுவது வழக்கம். இந்தியாவில்தான் பிரார்த்தனை யின் போது சுலோகங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. பின்னர் பண்டித காரே பிரார்த்தனையின் மூன்றாவது பகுதியாக ராம பஜனையையும் சேர்த்துக்கொள்ளும்படி செய்தார். பிறகு கீதையிலிருந்து சுலோகங்களைப் பாராயணம் செய்வது, நான் காவது பகுதியாயிற்று.

மாலைப் பிரார்த்தனையின்போது கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் உள்ள 19 சுலோகங்களைக் கூறுகிறோம். அந்த

சுலோகங்களில், ஸ்திதப்ரக்ஞனின், அதாவது நிலைத்த அறிவுடையவனின் குணச்சிறப்புகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சத்தியாக்கிரகிக்கு அந்தக்குணங்கள் ஏற்பட வேண்டும். எனவே, சத்தியாக்கிரகியின் மனத்தில் அது எப்போதும் இருந்து வர வேண்டும் என்பதற்காகவே, அந்த சுலோகங்கள் தினசரிப் பிரார்த்தனையில் சேர்க்கப்பட்டுள்ளன.

நாள் தோறும் அதே பாடலையும், பஜனையையும், சுலோகங்களையும் திருப்பித் திருப்பிக் கூறுவதால், பிரார்த்தனை யந்திரம் போலாகிப் பலனற்றுப் போக இடம் ஏற்படுகிறது என்று ஓர் ஆட்சேபணை எழுந்தது. அத்தகைய பிரார்த்தனை யந்திரம் போலாகி விடுகிறது என்பது உண்மையே. நாமே யந்திரங்கள் தானே. நம்மை ஆட்டுவிப்பவர் கடவுள் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்குமாயின், அவரது கையில் நாம் யந்திரங்களைப் போலவே நடந்து கொள்ள வேண்டும். வானத்தில் உள்ள சூரியனும் மற்ற கிரகங்களும் யந்திரங்களைப் போல் வேலை செய்யாவிடில், உலகம் செயலற்றுப் போய்விடும். எனினும், யந்திரங்களைப் போல் நடந்து கொள்ளும் நாம் ஜடப்பொருளைப் போல் இருந்து விடக்கூடாது; நாம் விவேகமுள்ளவர்கள். எனவே, நாம் விவேகிகளைப் போல் சில விதிகளை அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். பிரார்த்தனைப் பாடல்களும் சுலோகங்களும் தினந்தோறும் ஒரே விதமாக இருக்கின்றனவா அல்லது வெவ்வேறு விதமாக இருக்கின்றனவா; என்பது முக்கியமல்ல. அவை ஒவ்வொருநாளும் வெவ்வேறு விதமாக இருந்தால் கூட, அவற்றினல் பலனில்லாமல் போய் விடலாம். ஹிந்துக்களிடையே காயத்திரியும், முஸ்லீம்களிடையே கல்மாவும், கிறிஸ்தவர்களிடையே மலைப் பிரசங்கமும் எத்தனையோ நூற்றுண்டுகளாக கோடிக்கணக்கானவர்களால் தினந்தோறும் கூறப்பட்டு வருகின்றன. அப்படியிருந்தும்

அவற்றின் சக்தி குறைந்து விடவில்லை; ஆனால், அவற்றின் சக்தி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. இவை யாவும் பிரார்த்தனைக்குக் காரணமான மனநிலையையும் உணர்ச்சியையும் பொறுத்தவை. சக்திவாய்ந்த இந்த வார்த்தைகளை நம்பிக்கையில்லாத ஒருவரோ அல்லது ஒரு கிளிப்பிள்ளையோ திருப்பித் திருப்பிக் கூறுவதன் மூலம் யாதொரு பலனும் ஏற்படாது. அதற்கு மாறாக, நம்பிக்கை உள்ளவர் அவற்றை அடிக்கடி கூறிவருவாராயின், அவற்றின் சக்தி நாளுக்கு நாள் வளர்ச்சியடைகின்றது.

நாம் சாப்பிடும் முக்கிய உணவும், அப்படித்தான். கோதுமை சாப்பிடுவோர், கோதுமையைத் தவிர மற்ற சாதனங்களையும் சாப்பிடுவார்கள். ஆனால், இந்த உபரி சாதனங்கள் அடிக்கடி மாறும். எனினும் கோதுமை உணவு மாத்திரம் மாறாது. ஏனெனில், அதுதான் சாப்பிடுவோரின் உயிருக்கு ஆதாரமானது. எனவே, அதில் அவருக்கு ஒருபோதும் சலிப்புத் தட்டாது. அதில் அவருக்குச் சலிப்பு ஏற்படுமாயின், இந்த உலகில் அவரது காலம் நெருங்கிவிட்டதென்பதற்கே அது ஓர் அடையாளமாக இருக்கும். பிரார்த்தனை சம்பந்தமாகவும் அந்த நியதியே பொருந்தும். பிரார்த்தனையில் உள்ள முக்கிய பகுதிகள் அப்படியே இருக்கும். ஆன்மாவிற்குப் பிரார்த்தனைப் பசி இருக்குமாயின், பிரார்த்தனை ஒரே விதமாக இருப்பதைப் பொருட்படுத்தாது; அதற்கு மாறாக அதுவே, ஆன்மாவின் பசியைத் தணித்து ஊட்டம் அளிப்பதாகவும் இருக்கும். அப்போதைக்கப்போது உணவைக் கைவிட்டு பட்டினி கிடப்பது உடலுக்குப் பலன் அளிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால், ஆன்மாவுக்குப் பிரார்த்தனை ஜீரணமாகவில்லை என்பது எக்காலத்திலும் கேள்விப்படாத விஷயமாகும்

உண்மை என்னவெனில், நம்மில் பலரும் ஆன்மாவின் நாட்டம் இல்லாமலேயே பிரார்த்தனை செய்கிறோம். ஆன்மா உண்டு என்பதை நம்புவது ஒரு நாகரிகமாகியிருப்பதால், நாமும் ஆன்மா உண்டு என்று நம்புகிறோம். நம்மில் பலருடைய நிலைமையும் அவ்வளவு துக்ககரமாகியிருக்கிறது. ஆன்மா உண்டு என்பது, தங்களுடைய அறிவுக்கு உகந்ததாக இருக்கிறது என்று சிலர் திருப்தி அடைந்திருக்கிறார்கள். எனினும், அந்த உண்மையை அவர்களுடைய உள்ளம் உணரவில்லை. எனவே, பிரார்த்தனையின் அவசியத்தை அவர்கள் அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். சமூகத்தில் தாங்கள் வாழ்வதால், அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பலரும் பிரார்த்தனை செய்கிறார்கள். அத்தகையோர் வெவ்வேறான பொழுது போக்குகளில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களே- உண்மையில் அவர்கள் பிரார்த்தனைக்காக வருவதில்லை. இசைக்காகவோ வேடிக்கைப் பார்ப்பதற்காகவோ பிரார்த்தனைப் பிரசங்கத்தைக் கேட்டு வைப்போம் என்பதற்காகவா தான் வருகிறார்கள். தங்கள் மனம் கடவுளுடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் வருவதில்லை.

பிரார்த்தனை என்ற சொல்லுக்கு இரத்தல் என்பதே பொருளாகும்; அதாவது பணிவுடன் கடவுளிடம் ஏதாவது கேட்பது என்பதே ஆனால், ஆசிரமத்தில் நடைபெறும் பிரார்த்தனை அந்தப் பொருளைக் கொண்டதல்ல. இங்கே, கடவுளைப் போற்றுவதும் வணங்குவதும் தியானம் செய்வதும் சுயத்தூய்மையை அடைவதும் போன்றவற்றிற்காகவே பிரார்த்தனை நடைபெறுகிறது.

ஆனால், கடவுள் யார்? கடவுள் நமக்கு வெளியே அல்லது உலகத்திற்கு அப்பால் உள்ள யாரோ ஒரு நபர் அல்ல. அவர் எங்கும் இருக்கிறார். எல்லாவற்றையும் அறிகிறார், எல்லாம் வல்லவராக இருக்கிறார். எவ்விதமான வழிபாடும் விண்ணப்பங்களும் அவருக்குத் தேவையில்லை. எல்லாவற்றினுள்ளும் அவர் இருப்பதால் எல்லாவற்றையும் கேட்கிறார். நமது ஆழ்ந்த எண்ணங்களையும் அறிந்து கொள்கிறார். அவர் நமது உள்ளங்களில் உறைகிறார்; விரல்களும் நகங்களும் ஒன்றுக்கொன்று எவ்வளவு அருகில் இருக்கின்றனவோ, அவற்றைக் காட்டிலும் அவர் நமது அருகில் இருக்கிறார். எனவே அவரிடத்தில் எதையும் கூறுவதால் என்ன பலன்?

இந்தச் சங்கடத்திற்காகத் தான், பிரார்த்தனைக்கு சுயத்தூய்மை என்ற பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரார்த்தனையின்போது நாம் உரக்கக்கூறுவது கடவுளுக்குக் கேட்க வேண்டும் என்பதற்காக அல்ல, நமக்காகத்தான். சோம்பேறித்தனத்திலிருந்து நம்மைத் தட்டி எழுப்ப வேண்டும் என்பதுதான் பிரார்த்தனையின் நோக்கமாகும். கடவுள் இருக்கிறார் என்பது நம்மில் சிலரது அறிவுக்கு எட்டுகிறது; ஆனால், அவ்விஷயமாகப் பலர் சந்தேகத்தில் உழன்று வருகிறார்கள். யாரும் கடவுளை நேருக்கு நேராகக் கண்டதில்லை. அவரை அறிந்து கொள்ளவும், அவருடன் ஒன்றுபடவுமே நாம் விரும்புகிறோம். அந்த விருப்பத்தைப் பிரார்த்தனையின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள முற்படுகிறோம்.

நாம் நாடும், இந்தக் கடவுள் சத்தியமே. அதை மற்றொரு விதமாகக் கூறுவதாயின், சத்தியம் தான் கடவுள் ஆகும். நாம் உண்மையே பேசவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம் அல்லவா? நான் மேலே குறிப்பிட்டுள்ள சத்தியம் இது அல்ல.

இந்த உலகில் ஒன்றுதான் இருக்கிறது. அதுதான் சத்தியம். எல்லாவற்றிற்கும் அதுதான் காரணம். அது சொந்த சக்தியைக் கொண்டே நிலைத்து நிற்கிறது, அதுதான் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கிறதேயன்றி, அதற்கு ஆதாரமாக எதுவும் இல்லை. சத்தியம் மாத்திரமே நிரந்தரமானது; மற்றவை யெல்லாம் தாற்காலிகமானவையே. அதற்கு எந்தவித வடிவமும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை தூய அறிவும், பேரின்பமும் அதுதான். அதையே ஈசுவரன் என்று நாம் கூறுகிறோம். ஏனெனில், அதன் விருப்பத்திற் கிணங்கவே எல்லாம் இயங்குகின்றன. அதுவும் அது பிரகடனம் செய்யும் சட்டமும் ஒன்றேயாகும். எனவே, அது கண்மூடித்தனமான ஒரு சட்டமல்ல. அது உலகம் முழுவதையும் ஆட்சி புரிகிறது. இந்த சத்தியத்தைத் திருப்தி செய்வதே பிரார்த்தனையாகும். இந்த ஆர்வம் இருபத்து நான்கு மணி நேரமும் நம்மிடத்தில் இருந்து வர வேண்டும்.

நமது ஆன்மா மந்தமாக இருப்பதால், இரவும் பகலும் அந்த உணர்ச்சி நமக்கு இருப்பதில்லை. எனவே, சிறிது நேரம் மாத்திரம் பிரார்த்தனை செய்கிறோம். ஒரு காலத்தில் நமது நடத்தை முழுவதும் தொடர்ச்சியான இடைவிடாத பிரார்த்தனையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடனேயே நாம் சிறிது நேரமாவது பிரார்த்தனை செய்கிறோம். ஆசிரமவாசிகள் கூட ஒருவித நிர்ப்பந்தத்திற்காகவே பிரார்த்தனைக்கு வருகிறார்கள் எனில், நம்மில் எவருக்கும் பிரார்த்தனையில் உண்மையான ஈடுபாடு இன்னும் ஏற்படவில்லை என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

மனப்பூர்வமான பிரார்த்தனையில், பிரார்த்தனை செய்வோரின் கவனம் முழுவதும் பிரார்த்தனை செய்யப்படும்

பொருளில் ஈடுபட்டு விடுகிறது. அப்போது அவருக்கு வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் சிந்தனை இருப்பதில்லை. அவரது மனமும் கவனமும் பிரார்த்தனை செய்யப்படும் பொருளில் லயித்துவிடுகின்றன. பக்தரை ஒரு காதலனுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருப்பது முற்றிலும் சரியே. காதலியின் முன்னிலையில் காதலன் உலகத்தையே மறந்துவிடுகிறான், தன்னைக்கூட மறந்துவிடுகிறான். எனவே, பக்தருக்கு கடவுளிடம் அதைக் காட்டிலும் இன்னும் அதிக ஈடுபாடு இருக்க வேண்டும். மகத்தான முயற்சிக்குப் பிறகே, தனக்குத்தானே துன்பங்களை அனுபவித்த பிறகே, அதாவது தவம் செய்த பிறகே, தன்னைக் கண்டிப்பான ஒழுங்கு விதிகளுக்கு உட்படுத்திக் கொண்ட பிறகே, அந்த நிலை ஏற்படுகிறது.

('ஆசிரம நியமங்கள்' என்ற நூலின் இரண்டாவது அத்தியாயத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

5 உள்ளத்தைக் கவர்ந்த பிரார்த்தனை

ஆசிரமத்தில் பிரார்த்தனை மிகுந்த செல்வாக்கைப் பெற்று வருகிறது. யாதொரு முயற்சியுமின்றி தானாகவே அது வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. ஆசிரம பஜனாவளி நூல் பல பதிப்புகள் அச்சாகியும், இன்னும் அதன் பிரதிகள் தேவையாக இருக்கின்றன. இந்தப் பிரார்த்தனையின் பிறப்பும் வளர்ச்சியும் செயற்கையானவை அல்ல. அதில் இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சுலோகத்திற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பஜனைக்கும் ஒரு வரலாறு உண்டு. இந்த பஜனாவளியில் மற்ற பஜனை கீதங்களுடன், முஸ்லிம் சூபிகள், பக்கிரிகள், குரு நானக், கிறிஸ்தவப் பாடல் புத்தகம் முதலியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட பஜனைப்பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சீனர்கள், பர்மியர்கள், யூதர்கள், இலங்கையர்கள், முஸ்லிம்கள், பார்சிகள், ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் முதலிய பலரும் அப்போதைக்கப்போது ஆசிரமத்தில் வந்து வசித்திருக்கிறார்கள். அது போலவே, 1925-ல் மகன்வாடியில் இரண்டு ஜப்பானிய சாதுக்கள் என்னிடம் வந்தார்கள். சமீபத்தில் ஜப்பானுடன் யுத்தம் ஏற்படும் வரையில் அந்த சாதுக்களில் ஒருவர் என்னுடனேயே இருந்து வந்தார். சேவாகிராமத்தில் அவர் ஓர் சிறந்த உதாரண ஆசிரமவாசியாக விளங்கி வந்தார். ஆசிரம நடவடிக்கை ஒவ்வொன்றிலும் அவர் உற்சாகத்துடன் கலந்து கொண்டார். அவர் யாருடனும் சண்டையிட்டதாக நான் ஒரு போதும் கேள்விப்பட்டதில்லை. அவர் ஒரு மௌனத் தொண்டர். அவரால் இயன்ற வரையில் அவர் ஹிந்தியும் கற்றுக் கொண்டார். அவர் தமது பிரதிக்ஞைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பவர். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் அவர் தமது பேரிகையை அடித்துக் கொண்டும்

மந்திரத்தை ஜெபித்துக் கொண்டும் ஆசிரமத்தைச் சுற்றிப் போய்க் கொண்டிருப்பார். மாலைப் பிரார்த்தனை எப்போதும் அவருடைய மந்திரத்துடனேயே ஆரம்பமாகும். 'உண்மையான மதத்தை அளித்த புத்தர் பிரானுக்குத் தலைவணங்குகிறேன்'' என்பதுதான் அவரது மந்திரத்தின் பொருளாகும். அவரை ஆசிரமத்திலிருந்து கைது செய்துகொண்டு போக போலிசார் முன் அறிவிப்பு எதுவுமின்றி வந்தபோது, அவர் விரைவாகவும் ஒழுங்காகவும், சிறிதும் பற்றற்று போலிசாருடன் செல்வதற்கு ஆயத்தமானதை நான் ஒரு காலத்திலும் மறக்கமுடியாது. அவர் தமக்கு மிகவும் பிரியமான மந்திரத்தைக் கூறியபின் என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டார். அவர் தமது பேரிகையை என்னிடமே விட்டுச் சென்றார். "நீங்கள் எங்களை விட்டுச் செல்லுகிறீர்கள். ஆனால், உங்களுடைய மந்திரம் ஆசிரமப் பிரார்த்தனையின் ஒரு முக்கிய அம்சமாக எங்களுடன் எப்போதும் இருக்கும்'' என்றேன். இந்த வார்த்தைகள் அவர் விடைபெற்றுச் சென்றபோது, என்னை அறியாமல் என் வாயிலிருந்து வெளிவந்தன. அவர் எங்களிடையே இராவிட்டால்கூட, அதிலிருந்து எங்களுடைய காலைப் பிரார்த்தனையும், மாலைப் பிரார்த்தனையும் அந்த மந்திரத்துடனேயே ஆரம்பமாகி வந்திருக்கிறது. அந்த சாது கேசவரின் தூய்மையையும், தன்னலமற்ற பக்தியையும் அந்த மந்திரமானது, எப்போதும் என் நினைவில் இருக்கும்படி செய்திருக்கிறது.

சாது கேசவர் எங்களுடன் இருந்தபோது, பிபி ரெய்ஹானு தயாப்ஜியும் ஆசிரமத்தில் சில நாட்கள் வசிப்பதற்காக வந்திருந்தார். அவர் பக்தியுடைய ஒரு முஸ்லிம் என்பது எனக்குத் தெரியும். ஆனால், புகழ்பெற்ற அவரது தந்தை இறக்கும் வரையில் பிபி ரெய்ஹானு குரான் ஷரீபையும் நன்கு

படித்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. குஜராத்தின் மாணிக்கமான தயாப்ஜிசாகிப் மரணமடைந்த போது, அவரது அறையில் நிலவிய மௌனத்தைக் கலைக்கும் அழுகைக் குரல் எதுவும் கேட்கவே இல்லை. ஆனால், பிபி ரெய்ஹானா கணீரென்று ஓதிய குரான் வாக்கியங்களால் அந்த அறை எதிரொலித்துக் கொண்டிருந்தது. அப்பாஸ் தயாப்ஜியைப் போன்றவர்கள் இறக்க முடியாது. தேசத் தொண்டின் உதாரண மாக அவர் எப்போதும் உயிர் வாழ்ந்து வருகிறார். சிறந்த பாடகியான பிபி ரெய்ஹானா எல்லா விதமான பஜனைகளின் களஞ்சியமாக விளங்கினார். அவர் தினந்தோறும் பாடியதுடன், குரானிலிருந்து அழகான வாக்கியங்களை ஓதினார். கற்றுக் கொள்ள முடிந்த ஆசிரமவாசிளுக்குத் திருக்குரானிலிருந்து சில வாக்கியங்களைக் கற்றுக் கொடுக்கும்படி நான் அவரைக் கேட்டுக் கொண்டேன். அவரும் மகிழ்ச்சியுடன் அவ்விதமே கற்றுக் கொடுத்தார். இங்கே வரும் பலரையும் போலவே, பிபி ரெய்ஹானாவும் எங்களில் ஒருவரானார். சில நாட்களுக்குப் பிறகு அவர் சென்று விட்டாரெனினும், நறுமணம் வீசும், பாடலை அவரது ஸ்தானத்தில் விட்டுச் சென்றிருக்கிறார் அந்தப் பாடலும் ஆசிரமப் பிரார்த்தனையுடன் சேர்த்துக் கொள் ளப்பட்டிருக்கிறது. அந்த பாடலின் மொழி பெயர்ப்பு இதுதான் :

" கொடிய சைத்தானிடமிருந்து, அல்லாவினிடம் தஞ்சம் அடைகிறேன். " அவர் கடவுள், ஒரே கடவுள் அவரே. அவர் நிரந்தரமானவர், பரிபூரணமானவர்.

" அவருக்கு ஈடு இணை யாரும் இல்லை.''

ஹிந்து சமயம் அந்தப் பாடலால் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதே எனது நம்பிக்கையாகும் எல்லா

மதங்களிடத்திலும் நமக்கு சமமான மதிப்பு இருக்கவேண்டும். பாதுஷா கான் ஆசிரமத்துக்கு வரும் போதெல்லாம் பிரார்த்தனையில் மிகுந்த மகிழ்ச்சியுடன் கலந்து கொள்ளுகிறார். ராமாயண கானத்தின் இசையை அவர் மிகவும் விரும்புகிறார். கீதையின் சுலோகங்களை மிகவும் அக்கறையுடன் கவனித்துக் கேட்கிறார். அதனால், அவருக்கு இஸ்லாமிலுள்ள நம்பிக்கை குன்றிவிடவில்லை. அதுபோலவே நானும், சமமான மதிப்புடனும், பக்தியுடனும், குரான் வாக்கியங்களுக்கு ஏன் செவி கொடுக்கக்கூடாது?

வினோபாவும் பியாரிலாலும் சிறையில் அராபிய மொழியையும், குரானையும் கற்றுக் கொண்டார்கள். இந்த ஆராய்ச்சியால், அவர்களுடைய ஹிந்து சமய அறிவு வளம் பெற்றுள்ளது. உள்ளங்களின் அத்தகைய ஐக்கியத் தன்மையினால்தான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட முடியும். ராமனுக்கு ஆயிரம் பெயர்கள் மாத்திரம் இல்லை; அவரது பெயர்கள் எண்ணற்றவை. உண்மையான பக்தனின் உள்ளத்திலிருந்து வரும் அல்லா, குதா, ரஹிம், ரஸாக், உணவு அளிப்பவர் போன்ற வேறு எந்தப் பெயரில் அழைத்தாலும் அவர் ஒருவரே.

'ஹரிஜன்' 15-2-1942.

6 கூட்டுப் பிரார்த்தனை

"பிரார்த்தனைக்கு நீங்கள் வந்து கொண்டிருப்பதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். பிரார்த்தனை எனக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதுடன், அதை ஒரு பாக்கியமாகவும் நான் கருதுகிறேன். மனிதனை உயர்த்தும் அதன் செல்வாக்கை நான் உணர்ந்துள்ளேன். எனவே, அதை விடாமல் நடத்தி வரும்படி உங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுக்கு சுலோகங்கள் தெரியாமல் இருக்கலாம், உங்களுக்கு வடமொழியோ, பாடல்களோ தெரியாமல் இருக்கலாம். எனினும், ராம நாமம் எல்லோருக்கும் சொந்தமானது. அது பல்லாண்டுகளாக, வாழையடி வாழையாக வந்துள்ள சொத்தாகும். கூட்டமாகச் சேர்ந்து பிரார்த்தனை செய்வதைத் தொடர்ந்து செய்து வர வேண்டுமென நான் உங்களை ஏன் கேட்கிறேன் என்பதை இப்போது கூறுகிறேன்: மனிதன் ஒரு தனி நபர் மாத்திரமல்ல, சமூகவாதியுங்கூட. தனிநபர் என்ற முறையில் ஒருவர் விழித்துக் கொண்டிருக்கும் போதெல்லாம் தமக்குள் கடவுளைப் பிரார்த்திக்கலாம். ஆனால் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் என்ற முறையில், அவர் கூட்டமாகச்சேர்ந்து செய்யப்படும் பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டும். நான் தனியாக இருக்கும் போது, பிரார்த்தனை செய்கிறேன் எனினும், என்னுடன் அந்தப் பிரார்த்தனையில் கலந்து கொள்ள ஒரு சிலர் இராவிடில், நான் தன்னந்தனியாக இருப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது.

"உங்களில் வெகு சிலரையே எனக்குத் தெரியும். உங்கள் எல்லோரையும் நான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. உங்களுடன் நான் மாலைப் பிரார்த்தனை நடத்துவதே

போதுமானது. நான் இவ்வூரை விட்டுச் சென்றபின், இங்கே நான் பெற்ற பல அனுபவங்கள் என் உள்ளத்தில் எப்போதும் நிலைத்திருக்கும். அந்த நினைவுகளில் பிரார்த்தனைக் கூட்டங்களைப்பற்றியது தான் முக்கியமானதாக இருக்கும் எனினும், நான் செல்லும் அடுத்த இடத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடக்குமாதலால், உங்களிடமிருந்து பிரிவு எனக்குத் தோற்றாது. மனிதர்கள் யாவரும் சகோதரர்கள் என்பதையும், கடவுள் தந்தை என்பதையும் ஒப்புக் கொள்ளுவோர் எங்கே சென்றாலும் அவரைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்தை அவர் காணலாம். எனவே, பிரிந்து செல்ல வேண்டியிருக்கிறதே என்று அவர் வருந்த வேண்டிய அவசியமில்லை. ஆகையால் தயவு செய்து பிரார்த்தனையை நடத்தி வாருங்கள். உங்களுடைய சொந்த இடங்களிலேயே நீங்கள் கூட்டம் கூடிப் பிரார்த்தனை செய்யலாம். கடைசி பட்சமாக ஒருவர் தமது குடும்பத்தினருடன் மாத்திரமாவது பிரார்த்தனை நடத்தலாம். அதுவும் கூட்டுப்பிரார்த்தனைதானே. எனவே, ஒவ்வொரு நாளும் மாலையில் இந்த நேரத்தில் கூடிச் சில பாடல்களையும், கீதையிலிருந்து சில சுலோகங்களையும் கற்றுக் கொள்ளுங்கள். சுயாத்தாய்மைக்காக உங்களால் இயன்றதையெல்லாம் செய்யுங்கள்.

"ஒரு மனிதன் தன்னைப் படைத்தவரான கடவுளை இருபத்துநான்கு மணி நேரமும் நினைவு கூர்வதுதான் கடமையும் நேர்மையுமாகும். அது இயலாவிடில், நாம் கடவுளுடன் தொடர்பைப் புதுப்பித்துக் கொள்வதற்காக பிரார்த்தனை நேரத்திலாவது ஒன்று கூட வேண்டும். நாம் ஹிந்துக்களாயினும், முஸ்லிம்களாயினும், பார்சிகளாயினும், கிறிஸ்தவர்களாயினும் அல்லது சிக்கியர்களாயினும் நாம் அனைவரும் ஒரே கடவுளையே வணங்குகிறோம். வழிபாட்டின் மூலம் மனிதரிடையே முக்கியமான ஒற்றுமையை ஸ்தாபிப்பதே கூட்டுப் பிரார்த்தனையின்

நோக்கமாகும். கூட்டமாக தாளத்துடன் ராமபஜனை செய்வது அதன் வெளிப்படையான ஓர் அம்சமே. அது வெறும் யந்திரம் போன்ற காரியமாக இருக்கக்கூடாது. அது உள்ளத் தொடர்பின் எதிரொலியாக இருக்கவேண்டும். அவ்விதம் இருக்குமாயின் அது ஒரு சக்தியையும், இனிய மணம் கமழும் ஒரு சூழ்நிலையையும் உண்டாக்கிவிடும்.

'ஹரிஜன்' **3-3-1946.**

7 கட்டாயப் பிரார்த்தனை

கேள்வி : அகில இந்திய நூற்போர் சங்கத்தின் கிளை ஸ்தாபனத்தில் நான் வேலை செய்து வருகிறேன். பிரார்த்தனையில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனால், என் சகாக்களில் சிலருக்கு அதில் நம்பிக்கை இல்லை. எனினும், சங்க விதிகளுக்கிணங்க அவர்கள் பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதில் கலந்து கொள்ள மறுத்தால், தங்கள் வேலையை இழக்கும்படி நேரும் என்று அவர்கள் பயப்படுகிறார்கள். எட்டுமணி நேரம் வேலை செய்வதற்காகத்தான் ஊழியர்களுக்கு சங்கம் சம்பளம் கொடுக்கிறது என்பதே எனது அபிப்பிராயமாகும். அப்படியிருக்க, பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டும் என்று அதன் ஊழியர்களைக் கட்டாயப் படுத்த அதற்கு என்ன உரிமை இருக்கிறது ?

பதில் : கட்டாயப் பிரார்த்தனை என்று எதுவும் இருக்க முடியாது. பிரார்த்தனை பிரார்த்தனையாக இருக்க வேண்டுமாயின் அது யாருடைய வற்புறுத்தலுமின்றி மனப்பூர்வமானதாக இருக்க வேண்டும். ஆனால், இந்நாட்களில் கட்டாயம் என்பதுபற்றி மக்கள் விசித்திரமான கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள். ஒரு நிறுவனத்தில் சம்பளம் பெறுபவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொதுவான பிரார்த்தனையில் அந்த நிறுவனத்தில் உள்ள ஒவ்வொருவரும் கலந்து கொள்ள வேண்டும் என்பது விதியாக இருக்குமாயின், அந்த நிறுவனத்தின் மற்ற கடமைகளைச் செய்வது போல் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளத்தான் வேண்டும். யாதொரு வற்புறுத்தலுமின்றி நீங்களாகத்தான் அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

அந்த விதிகளை நீங்கள் ஏற்கனவே அறிவீர்கள் அல்லது அறிந்து கொண்டிருக்க வேண்டும். எனவே, நிறுவனத்தின் மற்ற அலுவல்களைச் செய்வது போல், பிரார்த்தனையிலும் நீங்களாகவே கலந்து கொள்ள வேண்டும். சம்பளத்திற்காக மாத்திரமே நீங்கள் அதில் சேர்ந்து கொண்டிருந்தால், நீங்கள் பிரார்த்தனையில் கலந்துகொள்ள முடியாது என்று மேலாளரிடம் தெளிவாக அறிவித்திருக்க வேண்டும். அவ்விஷயத்தில் உங்களுக்கு ஆட்சேபணை இருந்தும் கூட, நீங்கள் உங்களுடைய மறுப்பைத் தெரிவிக்காமல் அதில் சேர்ந்து கொண்டிருந்தால், நீங்கள் தவறு செய்ததாகிறது. அந்தத் தவறுக்கு நீங்கள் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். இதை நீங்கள் இருவழிகளில் செய்யலாம். ஒன்று, பிரார்த்தனையில் உள்ளம் ஒன்றி நீங்கள் அதில் கலந்து கொள்ளலாம். அல்லது நீங்கள் ராஜினாமாச் செய்துவிட்டு, அந்த நிறுவனத்திலிருந்து விலகிக் கொள்ளுவதன் மூலம் அதற்கு ஏற்படக்கூடிய நஷ்டத்திற்கு அவசியமான ஈட்டுத் தொகையைக் கொடுத்துவிட்டு, விலகிக் கொள்ள வேண்டும். ஒரு ஸ்தாபனத்தில் சேரும் ஒவ்வொருவரும் அப்போதைக்கப்போது நிர்வாகிகள் வகுக்கும் விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வகுக்கும் ஏதாவதொரு புதிய விதி சங்கடமானதாகத் தோன்றினால், அதை ஆட்சேபிப்பவருக்கு நிறுவனத்திலிருந்து விலகிக் கொள்ள உரிமையுண்டு. ஆனால், ராஜினாமா சம்பந்தமான விதிகளுக்கு உட்பட்டே அவர் விலகிக் கொள்ளவேண்டும். அந்த நிறுவனத்தில் இருக்கும் வரையில், அவர் அதற்குக் கீழ்ப்படியாமல் இருக்கக்கூடாது.

'ஹரிஜன்' **13-7-1940.**

8 கடவுளுக்கு மகிழ்ச்சியளிக்கும் வழிபாடு

ஏழைகளுக்குத் தன்னலமற்ற தொண்டு செய்வதைக் காட்டிலும் அதிகத் தூய்மையான, கடவுளுக்கு அதிக மகிழ்ச்சி யளிக்கக் கூடிய வழிபாடு வேறு எதுவும் இல்லை. சில பணக் காரர்கள் இறுமாப்பினாலும், தாங்கள் அறிவு படைத்தவர்கள் என்ற அகந்தையினாலும் கடவுள் இருப்பதைக்கூட மறுக்கத் தொடங்கிவிடுகிறார்கள். ஆனால், கடவுளை ஏழைகள் தங்களுடைய ஒரே அடைக்கலமாகவும் பாதுகாப்பாகவும் உறுதியாகப் பற்றிக் கொள்ளுவதால் கடவுள் ஏழைகளிடையே வசிக்கிறார். ஆகை யால், ஏழைகளுக்குத் தொண்டு செய்வது கடவுளுக்குத் தொண்டு செய்வதே ஆகும்.

'எங் இந்தியா' 14-2-1929

தொண்டு வழிபாடு அல்லவா?

கேள்வி: கடவுளை வழிபடுவதற்கு ஒருவன் செலவழிக்கும் நேரத்தை, ஏழைகளுக்குத் தொண்டு செய்வதில் கழிப்பது சிறந்ததல்லவா? உண்மையான தொண்டு செய்யும் மனிதனுக்கு கடவுள் வழிபாடு அனாவசியமாகி விடுகிறது அல்லவா?

பதில்: மனத்தின் மந்த நிலையையும், கடவுளிடம் உள்ள சந்தேகத்தையுமே இந்தக் கேள்வி காட்டுகின்றது எனக்கருது கிறேன். மாபெரும் கர்மயோகிகள்கூட ஒருபோதும் பக்திப் பாடல்களையோ, வழிபாட்டையோ கைவிடுவதில்லை. பிறருக்குத் தொண்டு செய்வதே கடவுள் வழிபாடுதான் என்றும், எனவே, அவ்விதம் தொண்டு செய்யும் பக்தர்கள் பிரார்த்தனைப் பாடல்

கள் முதலியவற்றில் நேரத்தைச் செலவழிக்க வேண்டாம் என்றும் கொள்கையளவில் கூறலாம். ஆனால், உண்மையில், பஜனைகள் முதலியவை உண்மையான தொண்டிற்கு ஓர் உதவியாகும். அவை, பக்தனின் உள்ளத்தில் எப்போதும் கடவுள் சிந்தனை புதுமையாக இருக்கும்படி செய்கின்றன.

நாம் பக்தி செலுத்தும் பொருளைத் தவிர வேறு எவ் விஷயத்திலும் ஈடுபடாமல் மனக்கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டுவிடுவதே உண்மையான தியானமாகும். பிரார்த் தனையின் போது கண்களை மூடிக்கொள்வதால் மனத்தை ஒரே பொருளில் ஈடுபடும்படி செய்ய முடிகின்றது. மனிதன் கடவுளைப் பற்றி மனத்தில் கொண்டுள்ள பாவனை ஓர் வரையறைக்கு உட் பட்டிருப்பது இயல்போயாகும். எனவே ஒவ்வொருவரும் தமது மனதிற்கு உகந்த சிறந்த முறையில் கடவுளை சிந்தித்துக் கொள்ளலாம். ஆனால், அந்த சிந்தனை தூய்மையானதாகவும், மனிதனை உயர்த்துவதாகவும் இருக்கவேண்டும்.

'ஹரிஜன்' 18-8-1946.

9 யாரை, எப்படிப் பிரார்த்திப்பது ?

" கடவுளை வழிபடுவதென்பது கடவுளின் பெருமையைப் போற்றிப் பரவுவதுதான். ஒருவருடைய தகுதியின்மையையும், பலவீனத்தையும் ஒப்புக்கொள்ளுவதே பிரார்த்தனையாகும். கடவுளுக்கு ஆயிரம் பெயர்கள் உண்டு. சரியாகச் சொன்னால், கடவுள் எண்ணிக்கையற்ற பெயர்களை உடையவர். நமக்கு விருப்பமான பெயரைக் கொண்டு அவரை வழிபடலாம்; அல்லது வணங்கலாம். சிலர் ராமா என்றும், சிலர் கிருஷ்ணா என்றும், மற்றவர்கள் ரஹீம் என்றும், இன்னும் சிலர் கடவுள் என்றும் அழைக்கிறார்கள். எனினும் எல்லோரும் ஒரே தத்துவத்தையே வழிபடுகிறார்கள். எல்லாவித உணவுகளும் எல்லோருக்கும் ஒத்துக் கொள்ளாததைப் போல், எல்லாப் பெயர்களும் எல்லோருடைய மனத்திற்கும் இசைந்ததாக இருப்பதில்லை. ஒவ்வொருவரும் அவரது தொடர்புகளுக்கு உகந்த பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். கடவுள் எல்லோருடைய உள்ளத்திலும் இருப்பவர், எல்லாம் வல்லவர், எங்கணும் நிறைந்தவர். எனவே அவர் நமது உள்ளத்தின் ஆழத்திலுள்ள உணர்ச்சிகளை அறிந்து, அவரவரது தகுதிகளுக்குத் தகுந்தவாறு அருள் புரிகிறார்.

ஆகையால், வழிபாடோ அல்லது பிரார்த்தனையோ வாயிலிருந்து வருவதாக இருக்கக்கூடாது, உள்ளத்திலிருந்து வர வேண்டும். அதனால்தான் ஊமை, திக்குவாயன், படிப்பில்லாதவன், மூடன் முதலிய யாவரும் கடவுளைப் பிரார்த்தனை செய்ய முடிகிறது. தேனொழுகப் பேசி, இருதயம் விஷம் நிறைந்ததாக இருக்குமாயின், அத்தகையோரின் பிரார்த்தனைக்குக் கடவுள் செவி சாய்க்கமாட்டார். எனவே, பிரார்த்தனை செய்வோர், இருதயத்தைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். ராமன், ஹனுமானின் நாவில் மாத்திரமல்ல, இருதய பீடத்திலும்

விற்றிருந்தார். அவர், ஹனுமானுக்கும் எல்லையற்ற சக்தியைக் கொடுத்தார். அந்த சக்தியினால் ஹனுமான் மலையையே தூக்கிக் கொண்டு கடலைக் கடந்து வந்தார். நம்பிக்கைதான், புயலால் கொந்தளிக்கும் கடலைக் கடப்பதற்கு உதவியாக இருக்கிறது; நம்பிக்கைதான் மலைகளை அசைக்கின்றது; நம்பிக்கைதான் கடலைத் தாண்டுவதற்கு உ த வி ய ா க இருக்கிறது. நம்பிக்கை என்பது வேறு எதுவுமில்லை; உள்ளத்தினுள் கடவுள் இருக்கிறார் என்ற ஜீவ உணர்ச்சிதான் நம்பிக்கையாகும். அத்தகைய நம்பிக்கையுள்ள ஒருவருக்கு எதிலும் ஆசை இராது. அவரது உடல் நோயுற்றிருந்தாலும், ஆன்மிக ரீதியாக அவர் நோயற்றவர் தான்; அத்தகையோரின் உடல் தூய்மையானது; அவர் தார்மிகச் செல்வத்தில் புரளுபவராகிறார்.

"ஆனால், இவ்வளவு தூரம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ளுவது எப்படி?" என்று கேட்கலாம். வாயால் பேசும் மொழி எளிதாகக் கற்பிக்கப்பட்டு விடுகிறது. ஆனால், இருதயத்தின் மொழியை யார் கற்பிக்க முடியும்? பக்தன், அதாவது கடவுளிடம் உண்மையான பற்று உடையவன் மாத்திரமே அந்த மொழியை அறிவான்; அவன் மாத்திரம் தான் அதைக் கற்பிக்கவும் முடியும்.

பக்தனைப் பற்றி மூன்று இடங்களில் கீதை விளக்குகிறது ஆனால், அவனைப்பற்றிப் பொதுவாக ஒவ்வோரிடத்திலும் குறிப்பிடுகிறது. எனினும், பக்தனைப்பற்றிய விளக்கத்தை அறிந்து கொள்ளுவது போதுமானதொரு வழிகாட்டியாகி விட முடியாது. இந்தப் பூமியில் அத்தகைய பக்தர்களைக் காண்பது அரிது. எனவே, தொண்டு புரியும் மதமே அதற்கான வழி என்று நான் கூறியிருக்கிறேன். தனது அண்டை அயலார்களுக்குத் தொண்டு செய்பவரின் உள்ளத்தையே கடவுள் தமது

இருக்கையாகக் கொள்ளத் தாமாக முன்வருகிருர். அதனுல் தான், எல்லாவற்றையும் ''பார்த்து அறிந்த'' நரசிமேத்தா, ''பிறரது துன்பத்தைக் கண்டு மனம் நைந்து உருகுவோனே உண்மையான வைஷ்ணவன்'' என்று பாடினுர். அபுபென் ஆதமும் அப்படித்தான். அவர் சக மனிதர்களுக்குத் தொண்டு புரிந்தார். அதனுல், கடவுளுக்குத் தொண்டு புரிந்தவர்கள் அடங்கிய பட்டியலில் அவரது பெயர் முதல் இடத்தை அடைந்தது.

துன்பத்திற்கும் துக்கத்திற்கும் உள்ளானவர்கள் யார்? தாழ்த்தப் பட்டவர்களும் வறுமையில் ஆழ்ந்தவர்களும் தான்: எனவே, இவர்கள் யாவருக்கும் ஒருபக்தன் உடலாலும், ஆன்மாவினுலும், உள்ளத்தினுலும் தொண்டு செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் தீண்டத் தகாதவர்கள் என்று கருதுவோர், அவர்களுக்கு எவ்விதம் உடலால் தொண்டு செய்ய முடியும்? ஏழைகளுக்காக நூற்பதற்குக்கூட உடல் வணங்காமல் நொண்டிச் சாக்குகளைக் கூறுவோர், தொண்டின் அர்த்தத்தை அறிந்து கொள்ள முடியாது. திடகாத்திரமுள்ள துர்ப்பாக்கிய சாலிகள் பிச்சை கேட்பதற்கு உரியவர்கள் அல்லர், எனினும், தங்கள் ஜீவனத்திற்கு உழைக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம். பிச்சை அவர்களை இழிநிலைக்குக்கொண்டு வந்து விடுகிறது. ஏழைகளின் முன்னிலையில் நூற்று. அவர்களையும் நூற்கும்படி அழைப்போர் கடவுளுக்குத்தொண்டு செய்தவராகிருர். உண்மையான பக்தியுடன் இலையேனும், பூவேனும், காயேனும், நீரேனும் எனக்கு அளிப்பவன் கூட எனது தொண்டனுகிவிடுகிருன், என்று பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறுகிருர். மிகவும் தாழ்த்தப்பட்ட ஏழைகளுக்காக நூற்பதுதான் மிகப்பெரிய பிரார்த்தனையும், மிகப்பெரிய தியாகமும் ஆகும்.

'எங் இந்தியா' 24–9–1925.

10 எனது பிரார்த்தனை முறை

சேவாக்கிராமத்தில் காந்திஜியை ஒரு பாதிரியார் பேட்டி கண்டு, "உங்களுடைய பிரார்த்தனை முறை என்ன?" என்று கேட்டார். அதற்குப் பதிலாக காந்திஜி கூறியதாவது:

நாங்கள் காலையில் 4-20 மணிக்கும், மாலையில் 7மணிக்கும் கூட்டாகப் பிரார்த்தனை செய்கிறோம். இத்தகைய பிரார்த்தனை சென்ற பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. கீதையிலிருந்தும் பிற மத நூல்களிலிருந்தும், முனிவர்களின் சில வாக்கியங்களை, இசையுடனோ இசை இல்லாமலோ நாங்கள் பிரார்த்தனைக்கு எடுத்துக் கொள்கிறோம், தனி நபரின் பிரார்த்தனையைச் சொற்களால் வருணிக்க முடியாது. அத்தகைய பிரார்த்தனை இடைவிடாது நடந்து வருகிறது; ஒரு சாட்சி எப்போதும் எதிரில் இருந்து கொண்டிருப்பதாக நான் உணராத விநாடியே இல்லை. அந்த சாட்சியின் கண்கள், ஒன்றைக்கூட விடாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவருடன் எப்போதும் தொடர்பு வைத்துக்கொள்ள நான் முயற்சித்து வருகிறேன். கிறிஸ்தவ நண்பர்கள் பிரார்த்திப்பதைப்போல நான் பிரார்த்திப்பதில்லை. அவர்கள் பிரார்த்திப்பதில் தவறு எதுவும் இருப்பதாக நான் கூறவில்லை. ஆனால், அவர்களைப்போல் மன்றாடிக் கேட்டுக் கொள்வதற்கான வார்த்தைகள் எனக்கு வருவதில்லை. அது பழக்கத்தைப்பொறுத்த ஒரு விஷயம் என்று நான் நினைக்கிறேன்.

பாதிரியார் : உங்களுடைய பிரார்த்தனையில், உங்களுடைய கோரிக்கைகளைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதற்கு இடம் இருக்கிறதா ?

காந்திஜி : இந்தக் கேள்விக்கு இருக்கிறது என்றும், இல்லை என்றுமே பதில் கூற வேண்டும். வேண்டத்தக்கது அனைத்தும் அறிந்தவர்; எனவே, நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கவில்லை. ஆனால், மிகுந்த குற்றம் குறைகள் உள்ள மனிதனான நான், தந்தையின் பாதுகாப்பை ஒரு குழந்தை நாடுவதைப்போல், கடவுளின் பாதுகாப்பை நாடுகிறேன். இருந்தாலும், நான் செய்யும் எதுவும் அவரது திட்டங்களில் எவ்வித மாறுதலையும் உண்டாக்கிவிடாது என்பதை நான் அறிவேன். எல்லாவற்றிற்கும் விதிதான் காரணம் என்ற கொள்கையுடையவன் நான் என்று நீங்கள் விரும்பினால் கூறலாம்.

பாதிரியார் : உங்களுடைய பிரார்த்தனைக்கு ஏதாவது பதில் கிடைத்தது உண்டா?

காந்திஜி : அவ்விஷயம் சம்பந்தபட்டவரையில் என்னை ஓர் அதிருஷ்டசாலி என்றே நான் கருதுகிறேன். பதிலளிக்க கடவுள் ஒருபோதும் தவறியதில்லை என்பதை நான் கண்டுள்ளேன். வானத்தில் மிகவும் இருள் சூழ்ந்திருந்தபோது, சிறைகளில் எனக்குச் சோதனைகள் ஏற்பட்டு நான் சங்கடமான நிலையில் இருந்தபோது, கடவுள் என் அருகிலேயே இருப்பதை நான் உணர்ந்தேன். கடவுளால் நான் கைவிடப்பட்டேன் என்ற உணர்ச்சி, என் வாழ்க்கையில் ஒரு விநாடி கூட எனக்கு ஏற்பட்டதாக நான் கூற முடியாது.

'ஹரிஜன்' 24-12-1938.

காந்தி இலக்கிய மன்றம்

காந்தி நூற்றாண்டு விழாப் பரிசாகக் காந்தி இலக்கிய மன்றத் திட்டத்தை அன்பர்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

காந்தியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சிறு நூல்கள் பல வெளிவர வேண்டும் என்பது எங்கள் அவா. சமூகம், சமயம், அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம், உலக சமாதானம் முதலான பல்வேறு துறைகளைப் பற்றி மாதம் இரண்டு ஏடுகள் தங்கள் வீடு நோக்கி வரும். ஆண்டு இறுதியில் தங்களிடத்தில் 24 ஏடுகள் சேர்ந்திருக்கும். ஒவ்வொன்றின் விலை 50 காசுகள்; எனினும் ரூ. 10/-க்கே தாங்கள் இவையனைத்தையும் பெற்றுப் பயனடையலாம். தபால் செலவு எங்களுடையது. தாங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இத்திட்டத்தில் சேர இசைவு தெரிவித்து எங்களுக்கு ரூ. 10/- அனுப்ப வேண்டியதே.

இலக்கிய மன்றத் திட்டத்தில் சேர்ந்து ஆதரவு தருவதுடன், முழுப்பயன்பெற வேண்டுகின்றோம்.

செயலாளர்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி

காந்தி நிலையம்
மதுரை-13
தொலைபேசி : 25700

WRAPPER AT VAIGAI, MADURAI-1